# பள்ளிவாசல் தீ: இலங்கை முஸ்லிம்கள் கண்டனம்;

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 1
இதழ்: 194
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 9 ஜ: ஆகிர் 11 திங்கட்கிழமை [25-8-69]

**முக்கிய அறிவித்தல்**

மில்க் வைற் சோப் வாங்குபவர்கட்கு தொண்டமானாறு முருகன் சந்நதி கோவில் வீதியில் 25-8-69 தொடக்கம் 27-8 69 வரை எங்கள் விளம்பர வானில் கீழ்க்காணும் பொருட்களை அன்பளிப்பாகக் கொடுக்கின்றோம்.

(1) கந்த விரதமும் துதிப்பாடல்களும் என்னும் தேவாரப்புத்தகமும்
(2) ஓர் அழகிய பிளாஸ்டிக் பை,

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.

**மில்க்வைற் ஸ்தாபனத்தார்**

# இஸ்ரேல் ராஜீய உறவை துண்டிக்கக் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு ஜெருஸலத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து உலகெங்கிலுமுள்ள இஸ்லாமிய மக்களுடைய உள்ளக் குமுறலைக் காட்டுவதற்கு எடுத்துக்காட்டாக இன்று, இலங்கை வாழ் முஸ்லிம் மக்களும் தங்கள் உணர்ச்சியைத் தெளிவாகக் காட்டினர். கொழும்பு ஸாகிராக்கல்லூரி மைதானத்தில் இன்று மாலை நடந்த கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டனர்.

வேருவலை, கண்டி ஆகிய இடங்களிலிருந்தும் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கொழும்பு நகருக்குத் திரண்டு வந்திருந்த முஸ்லிம் மக்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசலிலிருந்து ஸாகிராக் கல்லூரிக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

கண்டி, பதுளை. கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த முஸ்லிம்வர்த்தக ஸ்தாபனங்கள் இன்று கடையடைப்புச் செய்தன.

ஸாகிராக்கல்லூரி மைதானத்தில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் வேறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய அல்ஹாஜ் பதியுதீன் மாமூத், அல்ஹாஜ் எம். எச். முகம்மது, டாக்டர் எம். ஸி. எம். கலீல் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

இஸ்ரேலுடனுள்ள ராஜீயத் தொடர்பை இலங்கை உடனடியாகத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றும் கூட்டத்தில் நிறைவேறியது.

இன்று மாலை கொழும்பில் சகல முஸ்லீம் வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன

**முஸ்லிம் மசூதி சேதத்துக்கு**

## யாழ்ப்பாணத்தில் ஆட்சேப ஊர்வலம்

யாழ்ப்பாணம், திங்கள் ஜெருசலத்தில் பைதுல் முகர்திஸ் பள்ளிவாசல் தீ மூட்டி எரிக்கப்பட்டதைக் கண்டிக்கும் முகமாக யாழ்ப்பாண நகர மண்டபத்தில் இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாண முஸ்லிம்களால் ஒரு கண்டனக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் சகல மதத் தலைவர்களும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்

ஊர்வலம் ஒன்று யாழ் சின்னப்பள்ளிவாசலிலிருந்து பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகி யாழ் நகரின் முக்கிய பகுதிகளூடாகச் சென்று யாழ் நகரமண்டபத்தையடையும்.

## அனுராதபுரத்தில் கடும் புயல் பல குடும்பங்கள் அவதி

கொழும்பு, திங்கள் 'அனுராதபுரத்தில் நேற்று வீசிய கடும் புயலினால் ஒரு லட்சம் ரூபா வரையில் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது சுமார் 25 வீடுகளில் உள்ள குடும்பங்கள் அவற்றை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது கூரைகளை காற்று அள்ளிச் சென்றுவிட்டது

அர்ச் ஜோசெப் தேவாலயத்தில் 30 அடிச் சுவர் விழுந்து விட்டது பெரிய மரமொன்று வீதியில் புரண்டதால் கார் ஒன்று நசிந்தது, அனுராதபுரம்புதிய நகரத்தில் ஏற்பட்ட சேதமே அதிகம்எனக் கூறப்பட்டது,

# மக்கள் பணிக்கு வாழ்வை அர்ப்பணிப்பதாக கிரி சபதம்

## புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றார்

புதுடில்லி, ஆக. 24

**பாரதத்தின் நான்காவது ஜனாதிபதியாக திரு. வி. வி. கிரி இன்று நடைபெற்ற கவர்ச்சிமிக்க நிகழ்ச்சியொன்றில் பதவிப்பிரமாணம்எடுத்துக்கொண்டார்.**

**பதவி ஏற்பின் பின்னர் திரு. கிரி பேசியபோது பாரத மக்களின் பணிக்கு தம்மை மிகவும் அடக்கத்துடன் அர்ப்பணித்துக்கொள்வதாக கூறினார்.**



எதையும் கூறிக்கொள்ள இயலாது. நான் சாதாரண மனிதன் வசதிகுறைந்தமக்களுடன் வாழ்க்கையைப் பெருமளவில் செலவளித்தவன்' என்று திரு. கிரி தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் வரலாற்றுச்சிறப்புமிக்க மத்திய

தேசியகீதம் இசைக்கப்பட்டது

பதவியேற்பின் பின்னர் திரு. கிரி உரைநிகழ்த்துகையில், மக்களின் அன்பு தம்மைத் திணறச்செய்து விட்டது என்றார். மக்கள் எனது வெற்றியைத் தமது வெற்றியாகக் கருதுகிறார்கள். பாரத மக்களின் தலையாய பணிக்கு என்னைநான் மீண்டும் அர்ப்

## "50 ஆண்டில் துரிதவளர்ச்சி" ரஷ்யாபற்றி உடுவில் எம். பி.

அளவெட்டி, ஞாயிறு 'ரஷ்யா, சென்ற50ஆண்டுகளுக்குபின்தான்அமெரிக்கா நாட்டை எட்டிப்பிடிக்கும் அளவுக்கு முன்னேறியுள்ளது இதேபோல இப்போதும் முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும் முன்னேறி சிறந்த நாடாகவிளங்கும்'

இவ்வாறு ஏழாலை வடக்கில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சோவியத் - இலங்கை நட்புறவுச் சங்கக் கிளையின் கூட்டத்தில் கலந்துரையாற்றிய உடுவில் ஆட்சிமன்றஉறுப்பினர்திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்து பேசிய தர்மலிங்கம்மேலும்கூறியதாவது

சோவியத் நாட்டின் மத உரிமை பூரணத்துவம் பெற்றநிலையில் விளங்குகிறது தேவாலயங்களை புனரமைப்புசெய்ய அரசாங்கம் பணம்செலவிடுகின்றது.

ஆண்டுகளுக்கு இடையில் தான் அமெரிக்கா நாட்டை எட்டிப்பிடிக்கும் அளவுக்கு முன்னேறியுள்ளது மேலும் வர வர முன்னேறிக்கொண்டேயிருக்கிறது.

திரு கே. தேவதாஸ் தலைமையில் நடந்த இ கூட்டத்தில் வடபிரதேச கம்யூனிஸ் கட்சி செயலாளர் திரு. வி. பொன்னம்பலம், திரு. நாவேந்தன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. ரி. தேவராசா, போஷகர்: திரு. வி. தர்மலிங்கம் (எம்.பி.), திரு. வி பொன்னம்பலம் (மல்லாகம் கிராம சபைத் தலைவர்), உபதலைவர்கள்: திரு. ஈ. பால சுப்பிரமணியம், திரு. எஸ். பொன்னுச்சமி, காரியதரிசி: திரு. எஸ் நாவேந்தன், உபகாரியதரிசி: திரு. எஸ். தறுமு, தனதிகாரி:

## கிளிநொச்சி எம். பி.க்கு பிரதமர் பதில்

யாழ்ப்பாணம், திங்கள் தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு 760ம் எண் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி தமிழில் கை ஒப்பமிடப் பட்ட பதில் (மொழி பெயர்ப்பு அல்ல) அனுப்பப்பட வேண்டுமென இருந்தும் இது நடைமுறையில் செயல்படாது மீளப்படுவதாக சுட்டிக்காட்டி தமிழில் அனுப்பப்படும் கடிதங்களுக்கு தமிழில்(மொழி பெயர்ப்பு அல்ல)பதில்கள் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கும்படி பிரதமரை கடிதமூலம் கிளிநொச்சி எம் பி திரு கா பொ இரத்தினம் கேட்டிருந்தார்

இதற்கு பிரதமர் அனுப்பியுள்ள பதிலில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

அரசாங்கத்தின் நிலை விளக்கப்படு முகமாக இம்மாதம் 14ம் திகதியன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிதியமைச்சர் பால் விடுக்கப்பட்ட ஒரு வினவாக இவ்விஷயத்தை தாங்கள் எடுத்துள்ளமையும் நிதி அமைச்சர் அவ் வினாவிற்கு விடை பகர நேரம் கோரியுள்ளமையும் யான் அவதானிக்கலானேன் தாங்கள் தயைகூர்ந்து அவ்வினாவிற்கு நீதி அமைச்சர் விடை பகரும் வரை பொறுத்திருப்பது நன்று இவ்விஷயமாக அரசாங்கத்தின் நிலை என்ன என்பது அவ்விடை எடுத்துக் காட்டும்

பிரதமரிடமிருந்து வந்த இக்கடிதமும் மொழிபெயர்பாகவே அமைந்துள்ளதாக

## சந்திர மண் வயது 450 கோடி வருடம்

### விஞ்ஞானிகள் தகவல்

வாஷிங்டன், ஆக 24 அப்பல்லோ-11 விண்வெளி வீரர்களால் பூமிக்கு கொண்டுவரப்பட்ட சந்திரமண் 450 கோடி வருடங்களுக்கு முற்பட்டவையென மதிப்பிடப்பட்டுள்ளது, சந்திர பொருள் ஆய்வு நிலையத்தினரால் இது வரை அறிவிக்கப்பட்ட தகவல்களில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்படுகிறது:

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பித்துவைத்து பேசிய தர்மலிங்கம்மேலும்கூறியதாவது
சோவியத் நாட்டின் மத உரிமை பூரணத்துவம் பெற்றநிலையில் விளங்குகிறது தேவாலயங்களை புனரமைப்புசெய்ய அரசாங்கம் பண்ம்செலவிடுகின்றது.
ரஷ்ய நாடு சென்ற 50

வி பொன்னம்பலம் (மல்லாகம் கிராம சபைத் தலைவர்), உபதலைவர்கள்: திரு. ஈ. பாலசுப்பிரமணியம், திரு. எஸ். பொன்னுச்சமி, காரியதரிசி: திரு. எஸ் நாவேந்தன், உபகாரியதரிசி: திரு. எஸ். தறுமு, தனதிகாரி: திரு. ரத்தினகோபால்.



எனக்கு முந்திய ஜனாதிபதிகள் பேரறிஞர்களாகவும் சிறப்புமிக்கவர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். ஆனால் என்னால் அப்படி

களுடன் வாழ்க்கையைப் பெருமளவில் செலவளித்தவன்' என்று திரு. கிரி தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் வரலாற்றுச்சிறப்புமிக்க மத்திய மண்டபத்தில் பதவி ஏற்பு வைபவம் இடம்பெற்றது. தற்காலிக பிரதம நீதியரசர் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அப்பொழுது அங்குபலத்தகரஒலி எழுந்தது. 31 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

திரு. கிரி உரைநிகழ்த்துகையில், மக்களின் அன்பு தம்மைத் திணறச்செய்து விட்டது என்றார். மக்கள்எனது வெற்றியைத் தமது வெற்றியாகக்கருதுகிறார்கள். பாரத மக்களின் தலையாய பணிக்கு என்னைநான் மீண்டும் அர்ப்பணித்துக்கொள்கிறேன். அவர்களுக்குப்பணிசெய்யும் ஒரு தொண்டனாகவே என்னைக் கருதுகிறேன் என்றார் அவர்

லட்சக்கணக்கான மக்கள் மேன்மையான வாழ்வை அடையவேண்டுமென்று பொறுமையில்லாமல் காத்துக் கொண்டிருக்கிறார்கள் கட்டுப்பாடு, ஒற்றுமையோடும் உழைப்பதின் மூலமே இந்தப்பிரச்னைகளை நாம் தீர்த்தாகவேண்டும் என்று அவர் யோசனை கூறினார்.

திரு. கிரி, காலஞ்சென்ற முன்னாள்ஜனாதிபதி டாக்டர்

(4ம் பக்கம் பார்க்க)

பெயர்ப்பு அல்ல) பதில்கள் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்கும்படி பிரதமரை கடிதமூலம் கிளிநொச்சி எம் பி திரு கா பொ இரத்தினம் கேட்டிருந்தார்

இதற்கு பிரதமர் அனுப்பி யுள்ள பதிலில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

18.8.69 ல் அனுப்பி வைக்கப்பட்ட தங்கள் கடிதம் கிடைத்தது

நீதி அமைச்சர் வீட்டை பகரும் வரை பொறுத்திருப்பது நன்று இவ்விஷயமாக அரசாங்கத்தின் நிலை என்ன என்பது அவ்விடை எடுத்துக் காட்டும்

பிரதமரிடமிருந்து வந்த இக்கடிதமும் மொழி பெயர் பாகவே அமைந்துள்ளதாக திரு இரத்தினம் தெரிவித்தார்.

சந்திர பொருள் ஆய்வு நிலையத்தினரால் இது வரை அறிவிக்கப்பட்ட தகவல்களில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்படுகிறது:

வடபகுதி அசைஸ் விசாரணை

## ஊரதீவு கொலை முயற்சி வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு ஊரதீவைச் சேர்ந்த மருதப்பு ஐயம்பிள்ளை என்பவரை உடைந்த போத்தலால் குத்திக்கொலை செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டி சின்னத்தம்பி இராசலிங்கம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரி சுற்றவாளியென ஜூரி சபையினர் ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் திரு. டி. கிரெட்சர் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

1967ம் ஆண்டு மே மாதம் 19-ந் திகதி மருதப்பு ஐயம்பிள்ளை என்பவரை உடைந்த போத்தலால் குத்திக்கொலை செய்ய எத்தனித்ததாக சின்னத்தம்பி இராசலிங்கம் மீது குற்றம்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் எதிரியின் சார்பில் திரு. ஜிம்மி ராஜரத்தினம், திரு. எம். சிற்றம்பலம் ஆகியோரின் அனுசரணையுடன் அட்வகேட் திரு. எஸ். நாகராஜா ஆஜரானார். திரு. சிவபாக்கியநாதன் எதிரிக்காக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்தார். திரு. பிரியாந்த பெரேரா முடிக்குரியதரப்பில் ஆஜரானார்,

## தமிழ்மொழி விசேஷசட்டம் பற்றி நவரத்தினம்

அளவெட்டி, ஞாயிறு

கடந்தகாலங்களில் தமிழரசுக் கட்சியினர் நடாத்திய மொழிஉரிமைப் போராட்டங்களின் மூலம் தமிழ் மொழி விசேஷ சட்டம் தமிழருக்கு கிடைத்துள்ளது.

இவ்வாறு கைதடி வடக்கில் ஒரு தமிழரசு வாலிப முன்னணியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய சாவகச்சேரி எம். பி. திரு. வி. என் நவரத்தினம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: இம்மசோதா மூலம் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு சிறு சலுகைகளையாவது சில உத்தியோகஸ்தர் தட்டிக்கழிப்பதுகவலைக்குரியது. இதைஅரசாங்கம் கவனித்து அரசாங்க கொள்கைக்கு விரோதமாக நடப்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால்தமிழரசுக்கட்சிதன்குறிக்கோளை விடாது தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காக பாடுபடும் என்று உறுதி கூறினார். மற்றும் பலரும் பேசினார்கள்.

இவ்வாலிப முன்னணியின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்; திரு. வே. சபாபதிப்பிள்ளை, காரியதரிசி, திரு சி. கணேசலிங்கம் தனாதிகாரி: திரு வீ. சிவஞானப்பிரகாசம். ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## வான்புரண்டது; இருவர் பலி ஐவர் படுகாயம்

கொழும்பு, திங்கள்

100 அடி பள்ளத்தில் வான் ஒன்று புரண்டதால் இருவர் ஸ்தலத்திலேயே மாண்டனர். ஐவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர். இச் சம்பவம் நேற்று மஸ்கெலியாவில் நடைபெற்றது.

படுகாயத்துக்குள்ளான அம்பத்தனை தோட்ட சுப்பிரின்டன் திரு. எம். கந்தசாமிமூளாத்வத்தை தோட்ட சுப்பிரின்டன் திரு. ஈ பரமேஸ்வரன், பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களான வேலு ஆறுமூகம், கே தங்கவேலு ஆகியோர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் ஆர் கருணரதித்ன, புஞ்சிஅப்பு ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்

## எதிராக வாக்களித்தனர்

கோட்டை, ஞாயிறு

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பின் போது மக்கள் பிரதிநிதிகள் சபையில் தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தார்கள்.

## கருணாநிதி வெளிநாடு பயணம் ஒத்திவைப்பு

சென்னை, ஆக 24

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தமது வெளிநாடு பயணத்தை ஒத்திப்போட்டிருக்கிறார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பிரிட்டனுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பிரயாணம் மேற்கொள்வதற்கு திரு கருணாநிதி திட்டமிட்டிருந்தார்.

தமிழ்நாட்டில் இன்னும் பல அலுவல்கள் கவனிக்கப்பட வேண்டியிருப்பதால் அடுத்த ஆண்டு தமிழ்நாடு வரவுசெலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்வரை தமது வெளிநாட்டுப் பிரயாணத்தை ஒத்திவைக்கத் தீர்மானித்திருப்பதாக திரு. கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

## மகாசபை பிரதிநிதிகளுக்கு பிரதமர் அழைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை பிரதிநிதிகளை அடுத்த மாதம் 27ம் திகதி காலை 10-30 மணிக்கு தமது அலுவலகத்தில் தம்மை சந்திக்கும்படி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மகாசபைத் தலைவர். திரு. எம். ஸி. சுப்பிரமணியத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இம்மாதம் 7ம் திகதி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பிரதமருக்கு மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் அனுப்பிய கடிதத்துக்கு இந்தப் பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சமூகக் குறைபாட்டுச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை அகற்றி அதனை சக்தி பெறச் செய்ய வேண்டுமெனக் கோரி அண்மையில் யாழ். கச்சேரி முன்பாகச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த ஐவரின் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் பிரதரின் வாக்குறுதியின்பேரில் கைவிடப்பட்டது. பிரதமர் அரசாங்க அதிபர் ஊடாகக் கொடுத்த வாக்குறுதியில், சிறுபான்மைத் தமிழ் மகாசபையினருடன் நேரில் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதாக உறுதியளித்திருந்தார்.

# 3 இளம் சகோதரிகள் கிணற்றுள் தற்கொலை

## தெல்லிப்பளையில் கோர சம்பவம்

### மற்றோர் சகோதரி ஆஸ்பத்திரியில்

— நமது அளவெட்டி நிருபர் எஸ் ஆர் ஞானசுந்தரம் —

**வாழ்வை முடித்துக் கொள்ள கிணற்றுள் குதித்த திருமணமாகாத நான்கு இளம் சகோதரிகளில் மூவர் மாண்டனர் இந்த நெஞ்சைஉருக்கும் சம்பவம் தெல்லிப்பழை மேற்கில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது,**

**ஒரு சகோதரி அடைந்த மனச்சஞ்சலம் இவ்வித பரிதாப முடிவை ஏற்படுத்தியது. மூத்த சகோதரியான ரஞ்சிதம் (26 வயது) என்பவருடன் மாற்றான் ஒருவன் சேஷ்டை செய்ய முயன்றதுவே இந்த முடிவுக்கு காரணமானதாகக் கூறப்பட்டது.**

சம்பந்தப்பட்ட நபர் இவரது உடலில் தொட்டதாலே கொதிப்படைந்த இந்த இளம் பெண் மனக்கசப்படைந்து கிணற்றுள் குதித்து தற்கொலை செய்து கொண்டார் சகோதரியின்றி வாழமுடியாத மூன்று சகோதரிகளான சாந்தலச்சுமி (24 வயது), சுகிர்தமலர் (19 வயது) சுகுணதேவி (17 வயது) மூவரும் மூத்த சகோதரியுடன் இணைந்து சாவிலும் ஒப்பந்தம் செய்து கொண்டனர் ஆனால் இரண்டாவது சகோதரியான சாந்தலக்சுமி விஷயத்தில் காலன் இரக்கம் காட்டிவிட்டான்.

நேற்று முன்தினமிரவு தெல்லிப்பளை மேற்கிலுமுள்ள எஸ் செல்லத்துரை என்பவரின் பிள்ளைகளான இந்த நான்கு சகோதரிகளும் இரவு 7 மணியளவில் பக்கத்து வீட்டு கிணற்றுள் விழுந்ததாகவும், பின்னர் இரவு பத்து மணியளவில் கிணற்றுள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், ஒரு சகோதரியின் உயிரையே மீட்க முடிந்ததாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. காப்பாற்றப்பட்ட சகோதரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறார்.

தெல்லிப்பளை பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு என். சுந்தரமூர்த்தி விசாரணை நடாத்தினார்.

மரணவிசாரணையில் நான்கு சகோதரிகளும் எழுதியதாகக் கூறப்படும்மூன்று கடிதங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

துரைசிங்கம் என்பவர் மூத்த பெண்ணான ரஞ்சிதம் என்பவரைத் தொட்டதாலே தாங்கள் எல்லாரும் சாவை அணைத்துக் கொள்வதாக இந்தக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து வாழமுடியாத நிலையில் தாம் இறப்பதாகவும், இந்த மரணத்தில் வேறு எவருக்கும் சம்பந்தமில்லை என்றும் தங்களைப் பிரேத பரிசோதனை செய்ய வேண்டாமென்றும் இந்தக் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்கு மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையை நடாத்திய டாக்டர் மாணி

(4-ம் பக்கம்பார்க்க)

## நிலமற்ற மக்கள் நடத்தவிருக்கும் உண்ணாவிரதம்

உடுப்பிட்டி, ஞாயிறு

சொந்தத்தில் குடியிருக்க நிலமற்ற ஏழைச் சிறுபான்மைச் சமூகக் குடும்பங்கள் உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் வீட்டுக்கு முன்பும், பருத்தித்துறையில் உள்ள வடமராட்சிக் காரியாதிகாரி கந்தோர் முன்பும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

துன்னாலை தெற்கு கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய நிர்வாக சபைக் கூட்டத்தில் இம்முடிவு அறிவிக்கப்பட்டம். இக்கூட்டம்நிலையத் தலைவர் திரு. பா. தவயோகம் தலைமையில் நடைபெற்றது.

உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த துன்னாலை தெற்குக் கிராமத்திலுள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## கண்டேவியா தாயகம் திரும்பினர்

கோட்டை, ஞாயிறு

இலங்கையில் இந்தியத் தூதராகக் கடமையாற்றிய திரு. கண்டேவியா நேற்றுக் காலை தமது மனைவியுடன் தாயகம் திரும்பினார்.

கடந்த இரண்டரை வருடங்களாக இங்கு கடமையாற்றிய இவர் 1957—60 ஆண்டுகளிலும் இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றிய தோடு மாஸ்கோ, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்துபோன்ற பிறநாடுகள் பலவற்றிலும் உயர்ந்த பதவிகளை வகித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தோர், பல்கலைக்கழகம், கனிஷ்ட பல்கலைக்கழகம், ஆசிரிய கலாசாலை ஆகியவற்றின் புகுமுக பரீட்சைகளில் சித்தி பெறுவதற்கு கணக்கியல், வர்த்தகமும் நிதியும், தமிழ், பொருளாதாரம் எதிர்வரும் க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு 47 வருட வர்த்தக ஆசிரியராலும் இலங்கை பட்டதாரிகளாலும் கற்பிக்கப்படுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். 1968ல் க. பொ. த. உயர்தர வர்த்தக பரீட்சையில் திறமையான சித்தி பெற்ற இருவர் ஆசிரிய கலாசாலை விசேட பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். வர்த்தகக் கல்லூரி பழைய மாணவர் வட்டாரக்கல்வி அதிகாரியாக (வர்த்தகம்)- தெரிவு செய்யப்பட்டுள்ளார். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை 1924ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1345

### விற்பனைக்கு

60 ஏக்கர் காடு உறுதிக் காணி தனிக்குளத்துடன். குளம் பழுது பார்க்கவேண்டும். நெற் செய்கைக்குச் சிறந்தது. நெடுங்கேணியிலிருந்து 3 1/2 மைலுக்குள்ளே உள்ளது. பரப்பு ரூ. 15/-. வேப்பங்குளம் வவுனியா நகரசபை எல்லைக்குக் கிட்ட மன்னார் ரோட்டிலிருந்து 1/2 மைலுக்குள்ளே 5 ஏக்கர் இருத்தப்பட்ட காணி நடுத்தர வகுப்பினருக்கு மாற்ற முடியும். விளம்பர இல. 1342, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம் 1342

### தேவை

ஒரு தமிழ் வாலிபருக்கு தொழிலின் நிமித்தம், யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க மட்டுமே ஒரு அறை வேண்டும். பதினைந்து, இருபது சத பஸ் கட்டண தூரம் என்றாலும் சாப்பாட்டுடன் கிடைக்குமாயின் மிகவும் விரும்பத்தக்கது. சி. கதிர்வேல் விளம்பர இல. 1343, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம் 1343

திடகாத்திரமுள்ள நேர்மையான தொழிலாளர்கள் சிலரும் மாவட்டத்திலுள்ள தென்னந்தோட்டமொன்றில் வேலைசெய்வதற்குத் தேவை. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. வசிப்பிடம் வழங்கப்படும். எந்த ஜாதியினர் எனினும் பரவாயில்லை. மாதமொன்றுக்கு ரூபா 175/-க்கு குறையாமல் உழைக்க வாய்ப்புண்டு. டிராக்டர் செலுத்துபவருக்கு நாளொன்றுக்கு வேதனம் ரூபா 5/-. டிராக்டர் செலுத்தாத நாட்களில் தோட்டத்தில் சாதாரண வேலைகளில் ஈடுபடின் நாளொன்றுக்கு ரூபா 3/50 வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். R & P Ltd, த. பெ எண் 856, கொழும்பு. 1347

## திருத்தப்படும்

உரும்பராய், ஞாயிறு

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் பழைய கட்டடம் ஒன்று பழுது பார்க்கப்பட வேண்டுமென்று குறித்த வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம் நீண்டகாலமாக வித்தியா பகுதியினருக்கு வேண்டுகோள் விடுத்ததின் பயனாக குறித்த கட்டடத்தைத் திருத்தியமைப்பதற்கு வேண்டிய நிதியினை உதவ வித்தியாபகுதி முன்வந்துள்ளது.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 4 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

**எங்க ஊர் ராஜா**

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்



**குழந்தைக்காக**

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

**யாழ் வின்ஸர்** தினசரி 4 காட்சிகள்




## விளம்பரம்

### கட்டைவேலி கிராமசபை

கீழ்க்காணும் வேலைக்கு 1969-ம் ஆண்டு புரட்டாதி மாசம் ஏழாந் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30 மணிவரையும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் புரட்டாதி மாசம் ஆறுந் திகதி பகல் 12 மணிவரையும் வழங்கப்படும். ஏனைய விபரங்கள் கந்தோரிலறிந்து கொள்ளலாம்.

வேலையின் பெயர்

துன்னாலை தெற்கு-வடக்கு ஊரெல்லை ரோட்டு.

அ. அ. யோசேப்
நிர்வாகஸ்தர்.

கட்டைவேலி கி. ச.
கந்தோர்-அல்வாய்.
22-8-69 1717

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 25—8—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்தி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 பாட்டு, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்திச் சுருக்கம்.

## சரஸ்வதிக்கு முதலிடம்

அராலி, ஞாயிறு

வலி-மேற்கு 2ம் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப்போட்டிகளில் அராலி சரஸ்வதி

## கடெற் முகாம் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

தீயத்தலாவையில் கடந்த இரு வாரங்களாக நடந்த சிரேஷ்ட கடற் முகாம் போட்டி முடிவுகள் வருமாறு:

மாத்தளை அர்ச் தோமஸ் நெல்லியடி ம ம வி, மாகோ ம ம வி, கெக்கிராவ ம ம வி, அனுராதபுரம் ம ம வி, மின்னேரிய ம வி, மாத்தளை விஜய வித்தியாலய, யாழ். இந்துக் கல்லூரி, மதவாச்சி ம வி, திருநெல்வேலி பரமேஸ்வரா.

## ஆண்டு விழா

மல்லாகம், ஞாயிறு

மல்லாகம் கோட்டடி சன்மார்க்க சனசமூகநிலையத்தின் 10வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் புதன்கிழமை மாலை திரு. வே. செல்லத்துரை தலைமையில நடைபெறவிருக்கிறது. பிரதமவிருந்தினராக இவ்விழாவில் மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் கலந்து கொள்வார். செனேற்றர் சு நடராசா, உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, காரியாதிகாரி திரு. பீ. எல். பற்றிக் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்வர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

உடுப்பிட்டி, ஞாயிறு

தென்கருணையம்பதி இந்து வாலிபர்சங்க முதலாவது ஆண்டுவிழா எதிர்வரும் 28ந் திகதி ஸ்ரீலஸ்ரீ . திருஞானசம்பந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. இவ்விழா சோழங்கன் கருப்பையடி அம்மன்கோவிலுக்கு அருகாமையில் உள்ள நாவலர் அரங்கில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் திரு. க. முருகேசு திரு. வீ கே. நீலகண்டன் ஆகியோரின் சொற்பொழிவும், நல்லை ஞானசம்பந்த ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் பக்த கௌரி கதாப்பிரசங்கமும், 'மாங்கனி பெற்ற மாதரசி' வில்லுப்பாட்டும், ராஜ்நகைச்சுவை நாடகமன்றத்தாரின் 'சக்கடத்தார்' நாடகமும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## "மக்கள் தீர்ப்புக்கு மதிப்பு கொடுப்போம்"

நாத்தாண்டியா, ஞாயிறு

கடந்த அரசாங்கம் பத்திரிகைகளைத் தேசியமயமாக்க முயன்றது அடுத்த தேர்தலில் மக்கள் அவர்களது போக்கை எதிர்த்து எம்மை

## சோவியத் திரைப்பட விழா

மல்லாகம், ஞாயிறு

இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் ஆதரவில் நல்லூரில் அடுத்த மாதம் 5-ம் திகதி முதல் 12-ம் திகதிவரை சோவியத் திரைபடவிழாவும் புகைப்பட கண்காட்சியும் நடைபெறவிருக்கின்றது இக் கலாச்சாரக் காட்சியை சோவியத் ஸ்தானிகராலய அதிகாரி திரு. விளிக் ஆரம்பித்து வைப்பார். யாழ்ப்பாணம் மலாயா கபே மேல்மாடியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் உடுவில் எம். பி. திரு வி. தருமலிங்கம் தலைமையில் காட்சி ஏற்பாடுகளை கவனிக்க குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## இவர்களுக்கும் பயிற்சி வேண்டும்

பருத்தித்துறை, ஞாயிறு

"பௌத்த குருமாருக்கு அனுராதபுரத்தில் பல்கலைக்கழகம் அமைத்து ஆத்மீக ஈடேற்றத்திற்கான பயிற்சி அளிப்பதுபோல, சைவக் குருமாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு சைவப் பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென்று கோரும் பிரேரணை ஒன்று நேற்றுமுன்தினம் கரவெட்டி வாணி கலைக்கழகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. சைவப் புலவர் ஸ்ரீ குகானந்தசர்மா தலைமை வகித்தார்.

பிரேரணைப் பிரதிகள் உப சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், திரு. ஜி. ஜி பொன்னம்பலம் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## அவசர வேண்டுகோள்

மட்டுவில், ஞாயிறு

"விவசாயக் கடனைத்திருப்பிக் கொடுக்க வேண்டியகால எல்லைக்குள் கட்டத் தவறும் பட்சத்தில், விவசாயிகள், தமது சுய நலத்தையும், இன்னாட்டின் பொது நலத்தையும் பங்கப் படுத்துவது மல்லாமல், உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் தண்டனைக்கும், இலக்காகவேண்டிய நிலை ஏற்படக்கூடும்."

இவ்வாறு, மட்டுவில் சோமாஸ்கந்தா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், இப்பகுதி விவசாயிகளுக்கு ஓர் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## சமய தேவார இசை வகுப்பு

மல்லாகம், ஞாயிறு

குரும்பசிட்டி வளர்மதி

வாரத்தில்

## இனி இருமுறை பற் சிகிச்சை

சங்கானை, ஞாயிறு

சௌக்கிய இலாகா பல் வைத்தியப் பிரிவு உதவி அதிபர் திரு. மெண்டிஸ் சங்கானை அரசினர் ஆஸ்பத்திரிக்கு விஜயஞ்செய்து பற்சிகிச்சை நிலையத்தைப் பார்வையிட்டார்

இங்கு வாரத்தில் ஒருமுறை பற்சிகிச்சைபெற வரும் நோயாளர் அதிகரித்து வருவதாலும், அவர்களுக்கு வாரத்தில் ஒருமுறை தகுந்த சிகிச்சையளிக்கச் சந்தர்ப்பம் ஏற்படாமை குறித்தும் இந்நிலைய டாக்டர் திரு. க. க மகாலிங்கம் மேற்படி அதிபரிடம் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து. வாரத்தில் இருமுறை பற்சிகிச்சை நிலையம் இயங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென உதவி அதிபர் திரு. மெண்டிஸ் கூறியுள்ளார்.

## 35 ஆண்டுகளின் பின் ஓய்வு

பருத்தித்துறை, ஞாயிறு

35 ஆண்டுகளாகக் கரவெட்டி தபால் கந்தோரிற் கடமையாற்றிய திரு. தம்பு சின்னத்தம்பி இம்மாத இறுதியுடன் இளைப்பாறுகிறார். இந்நீண்டகாலப் பகுதியில் எவ்வித குற்றச்சாட்டுமின்றி மிகத்திறமையுடன் கடமையாற்றிய இவரதுசேவையை பாராட்டுமுகமாக இவரது சக ஊழியரும் பொதுமக்களும் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் ஒருபாராட்டுவிழா நடத்த உத்தேசித்துள்ளனர்.

## பொருட்காட்சி

அளவெட்டி, ஞாயிறு

தொண்டமனாறுசெல்வச்சந்நிதிகோவிலுக்கு அண்மையில் உள்ள கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இன்று முதல் 28ம் திகதி வரை ஒரு விவசாயப் பொருட்காட்சி நடைபெறுகிறது.

வடமாகாண விவசாயஅதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகரால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ள இப் பொருட்காட்சியில் விவசாய அபிவிருத்தியும், அபிவிருத்திக்கான வழி வகைகளும் இடம்பெற்றுள்ளன

கி. ச. தீர்மானம்

## மதுபானத்துக்கு வரி

## "விவசாயம் மூலம்மட்டும் பிரச்னையை தீர்க்க முடியாது"

பாணந்துறை, ஞாயிறு

"தேசிய அரசாங்கம் நாட்டின் பல பிரச்னைகளைத் தீர்த்து விட்டதாக 'புழுகு'கின்றது. ஆனல் அரசு பல பிரச்னைகளை உற்பத்தியாக்கி, மக்களை அவதிக்குள்ளாக்கியிருக்கிறது என்பது தான் உண்மை" என்று லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. அனில் முனசிங்கா பாணந்துறையில் கூறினார்.

பாணந்துறை நகரமண்டபத்தில் நடந்த லங்கா சமசமாஜக்கட்சி வாலிபர் முன்னணிக் கூட்டத்தில் அவர் பேசினார். திரு. லெஸ்லி குணவர்த்தன தலைமைவகித்தார்.

திரு. அனில் மேலும் பேசுகையில், "இந்நாட்டில் வேலையற்றிருக்கும் 2லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வேலை கிடைக்கவில்லையே' என்று தொழில் கந்தோர்களில் தமதுபெயர்களைபதிவு செய்திருக்கிறார்கள். 10 லட்சத்துக்கு மேற்பட்டோர் பெயரைப் பதிவு செய்யவிருக்கின்றனர். அரசாங்கம் நினைப்பதுபோல விவசாய அபிவிருத்தி ஒன்றின் மூலம் இந்நாட்டின் பிரச்னையைத் தீர்த்து விட முடியாது கைத்தொழில்மயமாக நாடுமிளிர வேண்டும். அப்போதுதான் பிரச்னை தீரும் முன்னேறிய உலகநாடுகள் இதற்குச் சான்று பகருகின்றன. உதாரணமாக இங்கிலாந்தில் 85 வீதத்தினர் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள்" என்று கூறினார்

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில், கூட்டாட்சியினர் தோற்கடிக்கப்பட்டதற்கு, அவர்கள் நிர்வாகத்தில் ஏற்பட்டதவறுதான் காரணம் என்பதை ஒப்புக்கொண்டார்.

## 'சோஷலிச ஆட்சி ஏற்படும் காலம் நெருங்கிவிட்டது'

### மல்லாகம் கி. ச. தலைவர் கூறுகிறார்

மல்லாகம், ஞாயிறு

"இலங்கையில் சோஷலிச ஆட்சி ஏற்பட உழைக்க வல்ல சகல சக்திகளும் ஒரு அணியில் ஒன்றுதிரள வேண்டும். மலையகத்தில் அரசியல் உரிமை இழந்து வாழும் இந்திய வம்சாவழியினரும், வட கிழக்கிலுள்ள உழவர் பெருங்குடி மக்களும் இவர்கள் வழிவந்த ஏனைய உழைக்கும் மக்களும் சோஷலிசத்திற்கான பக்கம் சேரும் காலம் வெகு தூரத்தில் இல்லை. தமிழ் மொழி உரிமைக்கு போராடும் அதே வேளை நாட்டை வறுமையிலிருந்து மீட்கவும் வழிவகை காண வேண்டும். நாடும் மொழியும் நமது இருகண்கள். நாட்டைக் காக்க பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தி, மொழியைப் பாதுகாக்க மொழிப் பற்றுக் கொண்ட வீரர் படை உருவாக வேண்டும்"

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் பாஷையூர் புனித அந்தோனியார் சனசமூக நிலைய கலைவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பொன்னம்பலம் தொடர்ந்து பேசியதாவது:

இந்திய நாட்டில் அண்ணா காட்டிய வழியில் செல்லும் தமிழக முதல்வர் கருணாநிதி முழு நாட்டின் முன்னேற்றம் கருதி சகல முற்போக்கு சக்திகளுடனும் கைகோர்த்து நிற்பதை இன்று காண்கின்றோம். இந்தியாவின் பொருளாதார புனர்வாழ்வுக்கு மேற்கொள்ளப்படும் எந்த முற்போக்கு நடவடிக்கைக்கும் தான் முற்றாக ஆதரவு வழங்கபோவதாக கருணாநிதி கூறியிருப்பது நல்ல எடுத்துக் காட்டாகும். பாரதம் தனது ஜனாதிபதி தெரிவு மூலம் கட்சி, இனங்களுக்கு அப்பாற்பட்ட புதிய முற்போக்கு பாதையை ஏற்படுத்தி தொழிலாளர் இயக்கத்தின் தலைவர் கிரியை பதவியில் ஏற்றியுள்ளது. இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் இந்த மறுமலர்ச்சி இந்திய மக்களின் வாழ்வை மாற்றி அமைக்க ஏதுவாக இருக்கும். இதையொத்த புதிய கண்ணோட்டத்தைஇலங்கைவாழ் தமிழ் மக்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

## "இன்றைய மாணவர் நாளை தலைவர்கள்"

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்



ஏ. வி. எம் ராஜன்,
புஷ்பலதா,
சிவகுமார்,
கீதாஞ்சலி, நாகேஷ்,
அஞ்சலிதேவி
நடித்த

பால்குடம்

அத்துடன் விண்வெளிக்கலம் அப்பல்லோ - 10 ன் பயணக் காட்சி 10 நிமிடங்களுக்கு காண்பிக்கப்படும்.

இன்று முதல்

யாழ்நகர் வெலிங்டன்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சிலசினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எஸ். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணுநிதி
பாலமுரளி கிருஷ்ணு ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்

பக்த பிரகலாதா

(ஈஸ்ட்மென் கலர்)

## சரஸ்வதிக்கு முதலிடம்

அராலி, ஞாயிறு

வலி-மேற்கு 2ம் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப்போட்டிகளில் அராலி சரஸ்வதி சனசமூகநிலையம் 136 மொத்தப் புள்ளிகளைப் பெற்றுச் சாம்பியன் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்தது.

அஞ்சலோட்டக் கேடயத்தையும், மேற்பிரிவு ஆண்கள் பிரிவில் சாம்பியன் கேடயத்தை மேற்படி நிலைய விளையாட்டு வீரர் செல்வன் வி. தில்லையம்பலம் பெற்ருர்.

## 4-வது குற்றத்துக்கு 6 மாத கடுழியம்

மல்லாகம், ஞாயிறு

மூன்று தடவைகள் குற்றப்பட்ட ஊரெழு வாசியான இராமன் குண்டுமணி என்ற நபர் ரூபா 75 பெறுமதி வாய்ந்த அரிவாள் கத்தி களவாடிய குற்றத்தை மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு ஆறு மாத கடுழியச் சிறைத்தண்டனை விதித்து இரு வருட கால பொலிஸ் கண்காணிப்பில் இருக்குமாறும் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - பத்மினி
நடித்த
ராணி சம்யுக்தா

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். - பத்மினி
நடித்த
காஞ்சித் தலைவன்

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45
Poya, Pre-Poya 4 Shows
7 WINCHESTER
FOR
A MASSCRE
(Color & Scope)

REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Elizabeth Taylor,
Richard Burton
in
BOOM
(Adults only)

## "மக்கள் தீர்ப்புக்கு மதிப்பு கொடுப்போம்"

நாத்தாண்டியா, ஞாயிறு

கடந்த அரசாங்கம் பத்திரிகைகளைத் தேசியமயமாக்க முயன்றது அடுத்த தேர்தலில் மக்கள் அவர்களது போக்கை எதிர்த்து எம்மை தெரிவு செய்தார்கள் நாங்கள் என்றும் மக்கள் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுப்பவர்கள்' என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நாத்தாண்டியாவில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

...க்கு ஓர் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## சமய தேவார இசை வகுப்பு

மல்லாகம், ஞாயிறு

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலைய இந்து சமய அபிவிருத்தி சங்கத்தினரின் சமய தேவார இசை வகுப்பினை சனிக்கிழமை மயிலிட்டி கிராமசபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி ஆரம்பித்து வைத்தார். திரு. முருகர் உல்லாசர் இவ்வகுப்பை இலவசமாக நடாத்தி வருகின்ருர்.

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

ஆவணி மாதம் 9 ந் திகதி (25-8-69)

**மேஷம்**- எண்ணம்போல் வாழ்வு மலரும். சமூகத்தில் மதிப்பு உயரும். வாகனச்சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள் சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்

**ரிஷபம்**- செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு, நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவுக்கு வரும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தடித்தரும் செய்தியும் கிடைக்கும்.

**மிதுனம்**- அதிகாரக் குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். அவசரநடவடிக்கையைத்தவிர்க்கவும்.

**கடகம்**- மனநிறைவுக்கு இடமுண்டு. மதிஜ்டபத்தின் மூலம் மற்றவர்களின் செல்வாக்கைப் பெறுவீர்கள் குடும்பவழியால் சுகம் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் திடீர் திருமணமும் இடம்பெறலாம். சுபதினம்.

**சிம்மம்**- முயற்சியால் முட்டுக்கட்டை தென்படும் மற்றவர்களிடம் குறைகேட்கநேரிடும். நண்பர்களின் தொல்லை எரிச்சலைத் தரலாம். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படும். துயர்படிந்த தினம்

**கன்னி**- தனவரவைக் குறிக்கின்றது. தாராள சிந்தை மூலம் செலவுக்கும் இட முண்டு. பொதுப்பணிகளில் ஆர்வம் மேலிடும். தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். அறவழிகளிலும் நாட்டம் ஏற்படும்.

**துலாம்**- உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு. சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்புக்கிடமுண்டு. நீண்டநாள் கடன்தொல்லை இன்று நிவர்த்தியாகும் செய்கருமங்களில் தெய்வத்தின் துணையுமுண்டு

**விருச்சிகம்**- கைநிறையப் பணம் தாராளமாகக் கிடைக்கும். புதிய விருந்தினர்கள் உங்களைத் தேடி வருவார்கள். தொழில்துறையில் இடமாற்றத்துக்கும் இடமுண்டு. வெளியூர்பயணமும் ஏற்படலாம்.

**தனுசு**- வாய்வுக்கோளாறு உடல்நலத்தைப் பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம்வேண்டும் தானிய நஷ்டத்துக்கு இடமுண்டு வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**மகரம்**- நலிவுதரும் சம்பவங்கள் இடம்பெறும் பொதுவாக நாவடக்கம் விரும்பத்தக்கது. திடீர் முடிவுகள் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்தும். அவசர புத்தியின் மூலம் ஆபத்தும் ஏற்படலாம்.

**கும்பம்**- பெரிய இடத்துச் சிநேகிதம் இன்று ஏற்படலாம். சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் பிறக்கும் புது வழிகளின் மூலம் பணம் கிடைக்கும் குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

**மீனம்**- எதிர்பார்த்தவேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன்தொல்லையும் அதிகரிக்கும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கைவேண்டும்.

...காட்சியில் விவசாய அபிவிருத்தியும், அபிவிருத்திக்கான வழி வகைகளும் இடம்பெற்றுள்ளன

கி. ச. தீர்மானம்

## மதுபானத்துக்கு வரி

மொரட்டுவ, ஞாயிறு

கிராமசபையின் வருமானத்தை உயர்த்த உள்ளூர் மதுபானங்களுக்கு வரி விதிக்க வேண்டுமென மொரட்டுவ நகர சபை விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## பண்ணிசை

உடும்பராய், ஞாயிறு

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு உரும்பராய் தெற்கு இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் உரும்பராய் தெற்கில் அமைக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தலில் சென்ற வெள்ளிக்கிழமையிலிருந்து பண்ணிசை விருந்து நடைபெற்று வருகிறது.

இணுவில் பண்ணிசைச் செல்வர் திரு. அம்பலம் குழுவினரின் குறித்த பண்ணிசைக் கச்சேரிக்கு அடியார்கள் பலர் சமுகமளித்தனர்.

## மலேரிய தடுப்பு

அளவெட்டி, ஞாயிறு

மலேரியாத் தடுப் பியக்கம் வலி வடக்கில் வலுவடைந்துள்ளது மலேரியாவைத் தடுக்க டி. டி. ரி. தற்போது வலி வடக்கில் உள்ள மாவிட்டபுரம் காங்கேசன்துறைப் பகுதியில் தெளிக்கப்படுகின்றது.

## தீ மிதிப்பில் மூவர் காயம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

செல்வச்சந்நிதி கோவிலில் தீ மிதிப்பில்கலந்துகொண்ட மூவருக்கு காலில் காயங்கள் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிருர்கள். ஆண், பெண் சிறுவர்கள் உட்பட ஏராளமாஞேர் தீ மிதிப்பில் கலந்து கொண்டனர்.

## இடமாற்றம்

சங்கானை, ஞாயிறு

வலிகாமம் மேற்குப் பிரிவுக் காரியாதிகாரி கந்தோரில் உணவு உற்பத்தி வேலைப் பிரிவில் கடமையாற்றிய செல்வி ரி. கந்தையா இம்மாதம் 21-ம் திகதி முதல் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

...நிலைய கலைவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

...டத்தை இலங்கைவாழ் தமிழ் மக்களும் கடைப்பிடிக்க வேண்டும்.

## "இன்றைய மாணவர் நாளை தலைவர்கள்"

மட்டுவில், ஞாயிறு

இன்றைய மாணவர்கள் தான் எமது எதிர்கால மக்கள் சமுதாயத்தின் தலைவர்கள். இந்த உண்மையை இன்றைய மாணவ உலகம் நெஞ்சில் நிறுத்தி, எமது சமுதாயத்தின் மொழி, கலை, கலாசாரங்களின் உயர்விற்காக உண்மையாக உழைக்கும் பணியில் ஈடுபடவேண்டும்'' இவ்வாறு மட்டுவில் அம்பலம்துறை வேம்படிக் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற விழா வொன்றில் பேசிய சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம், கூறிஞர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

''இன்று முன்னேறி வரும் உலக நாடுகளை நாம் நோக்குமிடத்தில் இந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு அடிக்கல்லாக இருப்பவர்கள் அந்நாட்டு வாலிபர்களே. அவர்களிடத்தில் நாட்டுப் பற்றும் மொழி, கலை, கலாசாரப் பற்றும் அதிகமாக இருப்பதை நாம் காணமுடியும். முன்னேறிய நாடுகளில் படித்த வாலிபர்கள், தமக்கு அரசாங்க உத்தியோகம் தான் வேண்டும், நாம் இப்படித்தான் வாழவேண்டும் என்று ஒருபோதும் தமது வாழ்வை வரையறுத்துக் கொள்வது கிடையாது அவர்கள் தமது நாட்டின் உயர்வை முன்னேடியாகக்கருதி இருப்பதினுல் சமுதாய உயர்விற்கான எத்தொழிலையும் சுறுசுறுப்பாகவும், விருப்பமாகவும் செய்கிருர்கள்.

இப்படியாக உழைப்பதின் காரணமாகவே அவர்கள் அரசியல்துறையில் ஈடுபடவும், தத்தம் சமுதாயத்தில் அத்தியாவசியமான மொழி, கலை, கலாசாரங்களின் உயர்வை பகுத்தறியவும் முடிகிறது.

இதனுல் இவர்கள் தமது சுயநலத்திற்காக, அரசியல் துறையில் ஈடுபடாமல் எதிர்கால சமுதாயத்தின் உயர்விற்காகவே அரசியல் துறையில் ஈடுபடுகிருர்கள். தமது சமுதாயத்தின் நலன்பேணி உழைக்கக்கூடிய தலைவர்களை தெரிவுசெய்கிருர்களே தவிர ஒருசிறு சலுகைக்காகவோ, சுயநலத்திற்காகவோ, அரசியல் துறையில் சுயநலம் காட்டுவதோ பந்தபாச உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுவதோ கிடையாது. இந்தவகையான நிலை எமது வாலிபாகள் மத்தியில் உருவாகவேண்டும்.

## "முதலாளித்துவ பட்ஜட்"

ஹெந்தலை, ஞாயிறு

தேசிய அரசாங்கத்தினுல் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து வரவுசெலவுத்திட்டங்களும் பணக்கார முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு மட்டும் பாதுகாப்பும் உதவியும் அளிப்பதாகவுள்ளன. ஒரு 'பட்ஜட்'டாவது சாதாரண மக்களுக்கு நன்மை அளிப்பதாக இல்லை.''

புளத்சிங்கள எம் பி திரு. மங்களமுனசிங்கா ஹெந்தலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## சொற்பொழிவு

வேலணை, திங்கள்

வேலணை நால்வர் மடத்தில் 8-ம் நாளாகிய இன்று 'பொய்யடிமையில்லாப் புலவர் சருக்கம்' பற்றி திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் சொற்பொழிவாற்றுவார்.

## தளபதி விஜயம்

விஸ்வமடு, ஞாயிறு

விவசாயப்படை தளபதி காப்டன் செனிவரத்திஞ ஒட்டிசுட்டான், விஸ்வமடு விவசாயப்படை முகாம்களுக்கு இம்மாதம் 28-ம்திகதி விஜயம் செய்யவிருக்கிருர்.

## வாழ்த்து

சித்தங்கேணி, ஞாயிறு

இந்திய ஜனதிபதியாக திரு. வி. வி. கிரி தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி வடதுன்னை கோவிற்கடவை கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவரும், வரணி மகாவித்தியாலய அதிபருமான திரு. வ. தங்கராசா வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## புதிய சமாதான நீதவான்கள்

ஞல்லைத்தீவு, ஞாயிறு

கரிகட்டுமூலைமேற்குகிராம சபைத் தலைவர் திரு, ந. குமாரசுவாமி கரிக்கட்டுமூலை தெற்கு கிராமசபைத் தலைவர் திரு. சி. சின்னத்துரை ஆகியோர் வவுனியா மாவட்ட நீதிபதி திரு. இ. நவரத்தினம் முன்னிலையில் சமாதான நீதிபதிகளாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அரபு லீக்' வெளிநாட்டமைச்சர்கள் அவசரமாகக் கூடுகிறார்கள்

## பள்ளிவாசல் எரிக்கப்பட்டது பற்றி உலக முஸ்லிம்கள் கண்டனம்

அம்மான், ஆகஸ்ட் 24

அல் அக்ஸா பள்ளிவாசல் கொளுத்தப்பட்டது சம்பந்தமாக ஆலோசிக்கவும், இந்தச் சம்பவம் குறித்துக் கூட்டாக என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பது பற்றியும் ஆராய்வதற்கு அரபு லீக் நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்கள் கெய்ரோவில் கூட விருக்கிறார்கள்.

இதற்கிடையில் அரபுக் குடியரசின் அதிபர் நாஸரின் பிரதம ஆலோசகர்களில் ஒருவரான டாக்டர் சாப்ரி, அம்மானுக்கு வந்து முக்கிய தலைவர்களைச் சந்திப்பதில் ஈடுபட்டிருக்கிறார் மன்னர் ஹுசேனைச் சந்தித்தபின்னர் அவர், ஈராக் சென்று அங்கும் முக்கிய தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார்.

ஜோர்டான் வெளிநாட்டமைச்சர் நேற்று அம்மானிலுள்ள பாகிஸ்தான் தூதருடன் ஆலோசனைகள் நடத்தினார். அரபு நாடுகளிலும், முஸ்லிம் உலகிலும் இந்தச் சம்பவம் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டிருக்கின்றது.

பள்ளிவாசல் எரிந்ததற்கும் இஸ்ரேலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்று இஸ்ரேல் மீண்டும் அறிவித்திருந்தபோதிலும் அரபு நாடுகள் இதனை ஏற்றுக் கொள்வதாய் இல்லை.

ஆஸ்திரேலிய வாலிபர் ஒருவரை இந்தச் சம்பவத்துடன் ஈடுபடுத்திக் கைது செய்து வைத்திருப்பதன் மூலம், கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் தகராறுகளைத் தூண்டிவிட இஸ்ரேல் முயற்சிசெய்கின்றது என்று ஜோர்டான் பிரதம மந்திரி குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

இந்தச் சம்பவம் இஸ்ரேலியரின் இன்னுமொரு காட்டுமிராண்டித் தனத்தை காட்டியிருக்கிறது என்று ஈராக் வெளிநாட்டு அமைச்சர் கூறியிருக்கிறார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை உடனடியாகக் கூடி, இதுவிஷயமாக ஆலோசனைகள் நடத்தவேண்டுமென்று சோமாலி பிரதமர் கேட்டிருக்கிறார்.

இந்த விஷயத்தைப் பாதுகாப்புச்சபையில் கிளப்பும்படி ஈரான், தனது ஐ. நா. பிரதிநிதிகளுக்கு உத்தரவுகள் அனுப்பியிருக்கிறது.

அரபு நாடுகளுடன் இஸ்ரேல் வெளிப்படையாகவே போர் ஒன்றைப் பிரகடனஞ் செய்வதாக இந்தச் சம்பவம் அமைந்திருக்கிறது என்று பாகிஸ்தான் தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். முஸ்லிம் உலகுக்கே இது ஒரு சவால் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஜெருசலத்தில் அரபுக்கள் குடியிருக்கும் பகுதியில் இன்னமும் பதற்றம் நிலவுகின்றது. நேற்று மசூதியை நோக்கி அரபு வாலிபர்கள் அலையலையாக வரத்தொடங்கினார்கள். உணர்ச்சிவசப்பட்ட மக்களை அடக்க, இஸ்ரேல் துருப்புக்கள் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அரபுப் பகுதிகளில் வேலைநிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றன.

# தமிழ்நாட்டு செய்திக்கோர்வை

### ஆஸ்பத்திரியில் மீண்டும் பெரியார்

திராவிடக்கழகத் தலைவர் திரு. ஈ. ராவே பெரியார் மீண்டும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

சிறுநீர் குழாய் கோளாறு காரணமாக அறுவை சிகிச்சை கொண்ட பெரியார் குணமாகி வீட்டுக்குச் சென்றிருந்தார். அவருக்கு மீண்டும் சுகவீனம் ஏற்பட்டதால் இப்பொழுது ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

0 0

### எம். எல். ஏ. கைது

குடிபோதையில் இருந்ததாக தஞ்சை தொகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம். எல். ஏ. ஏ.வை. எல். பரிசுத்த நாடார் என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். பாண்டிச் சேரியிலிருந்து கடலூர் பக்கமாக அவர் காரில் வந்து கொண்டிருக்கையில் கைதானார். அவர் காரிலும் மது போத்தல்கள் இருந்தனவாம்.

### கிரியின் மகள்

இந்தியாவின் புதிய ஜனாதிபதி திரு. வி. வி. கிரியின் மகள் தமிழ்நாட்டிலுள்ள பிள்ளையார் கோவிலில் தன் தந்தை வெற்றி பெற்றதற்காக பூஜை செய்தார். மீனாட்சியம்மன் கோயிலிலும் கிரியின்பெயரில் தனி அர்ச்சனை செய்தார். கிரியின் இன்னொருமகள் வெற்றி பற்றி கேள்விப்பட்டதும் தந்தையைச் சந்திக்க விமானத்தில் பறப்பட்டுச் சென்றார்,

0 0 0

### குன்றக்குடியடிகள் யோசனை

தமிழ் நாட்டில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்க வேண்டும் என்று குன்றக்குடி மடாதிபதி தமிழ் நாடு மேல்சபையில் யோசனை கூறியிருக்கின்றார்.

ஒரு வயது வரையான ஏழைப் பிள்ளைகளுக்கு அரசு பால்இலவசமாகக் கொடுக்க வேண்டும். 50ஆயிரம் ரூபாவுக்கு மேல்வருமானமுள்ள கோவில்களில் பசு மடங்களை ஏற்படுத்தி அதில் கிடைக்கும் பாலை இதற்குப் பயன் படுத்தலாம் என்றுகுன்றக் குடியடிகள் கூறினார்.

# வடபகுதி வெங்காயவிற்பனையில் ஏற்பட்டுள்ள தடை

## பிரதமருக்கு அவசரத் தந்தி

அளவெட்டி, ஞாயிறு

''வடபகுதியிலுள்ள விவசாயிகளின் வெங்காய அறுவடை காலத்தை அரசாங்கம் கவனிக்காது வெளிநாட்டில் இருந்து பம்பாய் வெங்காயத்தை வியாபாரிகள் மூலம் இறக்குமதி செய்ததால் கொழும்பு போன்ற முக்கிய சந்தைகளில் யாழ். விவசாயிகளின் வெங்காயம் விற்க முடியாது தடை ஏற்பட்டுள்ளது. ஆகவே உடன் நடவடிக்கை எடுங்கள்.''

இவ்வாறு பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு வடபகுதி விளை பொருள் உற்பத்தியாளர் சமாசத் தலைவர் திரு நா. த. சிவஞானம் அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இந்தப் போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சமாசம் கொள்வனவு செய்து தினமும் 4 ஆயிரம் அந்தர் வீதம் கொழும்புக்கு அனுப்பி வந்தது.

சென்ற சில தினங்களாக இந்த வெங்காயம் அனுப்ப தடை ஏற்பட்டுள்ளது இதனால் விவசாயிகள் வெங்காயத்தை விற்க முடியாது பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதுசம்பந்தமாக வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர் சமாசத் தலைவர் திரு. நா. த. சிவஞானம் பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு தந்தி அனுப்பியுள்ளதுடன் உணவு அமைச்சர் எம். டி பண்டாவுக்கும் தந்தி அனுப்பியுள்ளார்.

வடபகுதி விளைபொருள் உற்பத்தியாளர்சமாசத்தலைவர் திரு. நா. த. சிவஞானம் இதுபற்றி தெரிவித்துள்ளதாவது:

உத்தரவாதத் திட்ட விலையின்கீழ் அரசாங்கத்திடம் 40 ரயில் பெட்டிகள் ஒதுக்கித் தருமாறு பெற்று, தினமும் 4 ஆயிரம் அந்தர் வெங்காயம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால் இன்று வெங்காயம் கொழும்பில் விற்கத் தடை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வெங்காயம் அறுவடை செய்யப்படும் காலத்தை கவனியாது வெளிநாட்டிலிருந்து பம்பாய் வெங்காயத்தை இறக்குமதிசெய்ய வியாபாரிகளுக்கு உத்தரவு கொடுத்தது. இதனால் வியாபாரிகள் பம்பாய்வெங்காயத்தை கொழும்பு போன்ற பிரதான சந்தைகளில் ஏராளமாக குறைந்த விலையில் விற்பனை செய்வதனால் யாழ். வெங்காயம் அங்கு விற்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது'

இதுசம்பந்தமாக தாம்பிரதமரை இவ்வாரத்தில் பேட்டிகாணக் கூடிய சந்தர்ப்பத்தைஅளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

அவர், யாழ். விவசாயிகளுக்கு விடுத்துள்ளவேண்டுகோள்ஒன்றில் நீடித்த வறட்சியின் காரணமாக வெங்காய அறுவடை இந்தப் போகத்தில் 3 லட்சத்திலிருந்து ஒன்றரை லட்சமாக குறைந்துள்ளது. தற்போது தடையேற்பட்டுள்ளதே என கவலை அடையாது வெங்காயத்தைசேகரித்துவைத்தால் அடுத்த மாதங்களில் உங்கள் வெங்காயத்துக்கு நல்ல மதிப்பு ஏற்படுவதோடு நீங்கள் கூடிய லாபத்தையும் பெறலாம் எனறு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் வெங்காயம் அனுப்ப ரயில்பெட்டி இல்லாததால் தமது கிராமத்தில் 300 அந்தருக்கு அதிகமான வெங்காயம் பழுதடைவதால் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடமாகாண அரசாங்க அதிபரை வற்புறுத்தியுள்ளனர்.

இதேபோன்று மற்றும்பல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கோரியுள்ளன.

### அண்ணா பிறந்ததின விழா

மல்லாகம், ஞாயிறு

பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் அடுத்த மாதம் 9 ம் திகதி பருத்தித்துறை எம் ஜி ஆர் மன்றத்தினரால் அறிஞர் அண்ணாவின் 61- வது பிறந்த தின விழா வெகு சிறப்பாக கொண்டாடப் படவிருக்கின்றது. சொற்பொழிவுகள் கலை நிகழ்ச்சிகள் உருவப்படத்திரை நீக்கம் போன்றன இதில் இடம் பெறும்.

### நீரழிவுநோயாளர் கணக்கெடுப்பு

மல்லாகம், ஞாயிறு

நீரழிவு நோயாளிகளின் கணக்கெடுப்புகளை மேற்கொள்ளுவதற்காக டாக்டர் எஸ்வீரசிங்கத்தைத்தலைமையாகக் கொண்ட சுகாதார நிறுவனத்தின் குழுவொன்று யாழ்ப்பாணம் வருகின்றது. பல்கலைக்கழக பேராசிரியர்கள், நிபுணர்களைக் கொண்ட இக் கோஷ்டி டிசம்பர்மாதத்தில் அளவெட்டிக் கிராமத்தில் இந் நோயாளிகளின்வீத கணக்கெடுப்புச் செய்வர். மல்லாகம் கிராம சபையினர் பிரஸ்தாப குழுவினருக்கு வேண்டிய உதவிஒழுங்குககு செய்து கொடுப்பர்.

### ஜனவரியில் உள்ளூராட்சி வாரம்

மல்லாகம், ஞாயிறு

சமூக, பொருளாதாரமுன்னேற்றத்தில் முக்கியமாக கருதப்படும்பணிகளை 1970ம் ஆண்டு ஜனவரி மாத முதல் வாரத்தில் மேற் கொள்ளுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. யோசெப் சகலஉள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார். ஜனவரி மாதத்தில் ஆரம்பமாக விருக்கும் உள்ளூராட்சி வாரத்தின் போது தத்தமது பகுதிகளில் வாசிகசாலை, நூல்நிலையம், விளையாட்டுமைதானம்மதகு, கிணறுபோன்ற தேவைகளில் பொதுமக்களின் நிதி சிரமதான மூலம் செய்து முடிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஆபத்து

# இந்திரா மீது காங்கிரஸ் எம். பி. க்கள் நம்பிக்கை

## காங்கிரஸ் மேலிடத்தின் போக்கு மாறும் அறிகுறி

புதுடில்லி, ஆக.24

பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி மீது பூரண நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைநேற்றுஇங்கு கூடிய காங்கிரஸ்

என்று கருதப்படுகின்றது. ஒரிஸாவிலிருந்தும் 6 எம் எல் ஏ.க்கள் திரு. நிஜலிங்கப்பாவுக்கு அனுப்பியுள்ள ஒரு வேண்டுகோளில் பிரதமர் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று கேட்டிருக்கிறார்கள். நாளையதினம் காங்கிரஸ்கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டம் நடைபெறவிருக்

### புயலுக்குப் பின் வெள்ளம்

நியுயோர்க், ஆக 24

அமெரிக்காவின் தென் பகுதியில் இடம்பெற்ற பேய்ச்சூறுவலியின் காரணமாக இறந்தவர் தொகை 300 என்று அறிவிக்கப்

# வடக்கு விவசாயிகளுக்கு பிரி நிபுணர் பாராட்டு

அளவெட்டி, ஞாயிறு

''இங்குள்ள விவசாயிகள் விவசாயத்துறையில் நல்ல ஆர்வம் காட்டுகிறார்கள் இவர்கள் மேலும் ஆர்வம் காட்டினால் விவசாயத்துறையில் முன்னேறி நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்யலாம்''

இவ்வாறு இலங்கை வந்துள்ள பிரிட்டனிலுள்ள வேல்ஸ் சர்வகலாசாலையைச் சேர்ந்த கலாநிதி திரு. ரி. ஒலிவர் யாழ். மாவட்டத்தில்உள்ள விவசாயம் சம்பந்தமான இடங்களைப் பார்வையிட்டபின் கூறினார்

இவருடன் வந்துள்ள 20 பூமிசாஸ்திர ஆசிரிய. ஆசிரியைகள் வடமாகாண விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசக

மண், கற்பாறைகள் பற்றியும் விவசாய அபிவிருத்தி பற்றியும், யாழ் மாவட்டத்தில்உள்ள கீரிமலை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, ஆனையிறவு ஆகிய இடங்கள் உட்பட இன்னும் பல இடங்களுக்குச் சென்று ஆராய்ந்தனர்.

இவர்கள் வடமாகாண விவசாய அதிகாரியுடன் ஆனையிறவுக்குச் சென்றபோது அங்கு உப்புடன் கிடைக்கும் 'ஜிப்சம்' என்னும்பொருளை உபயோகித்து எப்படி உவர்மண் பண்படுத்தப்படுகிறது என்பது பற்றி விவசாய அதிகாரி விளக்கிக் கூறினார்.

மேற்படி குழுவினர் தற்போது மற்ற மாகாணங்களின் அமைப்பு முன்னேற்

### கந்தபுராண பிரசங்கம்

புதுக்குடியிருப்பு, ஞாயிறு

புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு சைவ நெறிக்கழகத்தின் ஆதரவில் கந்தப் புராணப் பிரசங்கங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன இரவு 7 மணி தொடக்கம் நிகழும் பிரசங்கங்கள் தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி மீது பூரண நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைநேற்றுஇங்கு கூடிய காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்றினார்கள்.

432 காங்கிரஸ் எம். பி.க்களில் 248 பேர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். திரு. சஞ்சிவையாவின் வீட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஆட்சிமன்றத்தின் காங்கிரஸ் எம். பி.க்கள் பெரும்பான்மையானவர்கள் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளதால் காங்கிரஸ்தலைவர்கள் திருமதி காந்தியைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கவோ, அவருக்கெதிராக வேறு நடவடிக்கை எடுக்கவோ மாட்டார்கள்

எல் ஏ.க்கள் திரு. நிஜலிங்கப்பாவுக்கு அனுப்பியுள்ள ஒரு வேண்டுகோளில் பிரதமர் மீது எதுவித நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று கேட்டிருக்கிறார்கள்.

நாளையதினம் காங்கிரஸ்கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலின் போது திருமதி காந்தியும் இதர சில மந்திரிகளும் நடந்துகொண்ட முறை பற்றி ஆலோசிக்கப்படும்.

மைசூர் காங்கிரஸ் கட்சியினர் விடாப்பிடியாக பிரதமர் மீதும் மற்றவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள்

காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பாவும் மற்றச் சின்டிக்கேட் தலைவர்களும் பிரதமர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதில் கண்டிப்பாக இருந்துவருகிறார்கள்

# தமிழ்நாடு காங்கிரஸில் பிளவு ஏற்படும் அறிகுறி

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்படும்அறிகுறிகள் தென்படுகின்றன.

ஜனாதிபதி தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளருக்கு எதிராக வேலைசெய்ததற்காக காங்கிரஸ் தலைவர் திரு.நிஜலிங்கப்பா பிரதமர் திருமதி காந்திக்கும்இதரமந்திரிகளுக்கும்நோட்டீஸ்அனுப்பியதை வாபஸ் பெறும்படி திரு. சி. சுப்பிரமணியம் கடிதம் எழுதியதற்கு தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சியில் எதிர்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. திரு. சுப்பிரமணியம் நிஜலிங்கப்பாவுக்கு கடிதம் எழுதியதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிச் செயலாளர் திரு. பூவராகன் கண்டித்திருக்கிறார்

கட்சிக கட்டுப்பாட்டை மீறியதால் திரு. சுப்பிரமணியமும் துரோகிகள் பட்டியலில் சேர்ந்துவிட்டார் என்று தென் சென்னை காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி திரு. சுப்பிரமணியம் மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டு வருவது பற்றியும் ஆலோசிக்கப்படுகின்றது. திரு சுப்பிரமணியம் தாமாகவே தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டியிலிருந்து விலகிவிடச்கூடும் என்றும் கூறப்படுகின்றது

# காங்கிரஸ் விலக்கினாலும் இந்திரா பதவிவகிக்கலாம்'

## கிருஷ்ணமேனன் விளக்கம்

புதுடில்லி, ஆக. 24

'இந்திராகாந்தியை பிரதமர் பதவியில் இருந்து நீக்க காங்கிரஸ் கட்சிக்கு அதிகாரமில்லை' என்று பழைய மந்திரி வீ. கே. கிருஷ்ண மேனன் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் கிரி வெற்றி பெற்றதற்கு பாராட்டுத் தெரிவிப்பதற்காக டில்லியில் ஒரு கூட்டம் நடந்தது. பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு பேசிய இந்தக்கூட்டத்தில் கிருஷ்ண மேனன் பேசுகையில் கூறியதாவது:

'பிரதமமந்திரி இந்த அரசின் தலைவர். அவர் பாராளுமன்றத்தில் உள்ள ஒரு அரசியல் கட்சிக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல.

பாராளுமன்றத்தில் அவருக்கு 'மெஜாரிட்டி' பலம் இருக்கும்வரை அரசை தலைமை தாங்கி நடத்திச் செல்ல அவருக்கு உரிமை உண்டு.

பாராளுமன்றத்தில் 'மெஜாரிட்டி'யாக உள்ள கட்சி பிரதமரை நீக்கிவிட முடிவு செய்தாலும் ஜனாதிபதி விரும்பினால் பாராளுமன்றத்தில் நம்பிக்கைஒட்டு பெறும்படி பிரதமருக்கு யோசனை கூறலாம்.

அதில் பிரதமருக்குமெஜாரிட்டி ஓட்டு கிடைத்தால் தொடர்ந்து அவரே பிரதமராக நீடித்து. சர்க்காரை நடத்திச் செல்லலாம்.

பிரதமர் பதவியில் இருந்து இந்திராவை நீக்க காங்கிரஸ் தலைவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் மெஜாரிட்டி உறுப்பினர்களின் நம்பிக்கையை பெறமுடியாமல் போனாலும்கூட, பாராளுமன்றத்தை கலைத்து விட்டு, பொதுத்தேர்தல் நடத்த உத்தரவிடும்படி, ஜனாதிபதிக்கு பிரதமர் சிபாரிசு செய்யலாம்

எனவே, இந்திராகாந்தியை பிரதமர் பதவியில் இருந்து நீக்க காங்கிரசுக்கு அதிகாரம் இல்லை.''

## வெள்ளம்

நியுயோர்க், ஆக 24

அமெரிக்காவின் தென் பகுதியில் இடம்பெற்ற பேய்ச்சூறுவலியின் காரணமாக இறந்தவர் தொகை 300 என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. முன்னர் 500க்கு மேலிருக்கும் என்று கருதப்பட்டது. 5 ஆயிரம் பேர் வீடுகளை இழந்திருக்கிறார்கள்.

சூறுவளியினால் ஏற்பட்ட சேதங்களை செப்பனிடுவதில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில் இப்பொழுது வெள்ளப்பெருக்கு அப்பகுதியைப் பயமுறுத்திக்கொண்டிருக்கின்றது.

இப்போதாதென்று இன்னுமொரு புயல் அப்பகுதியில் வீசக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

## தமிழில் 'பிரித்' ஓதுவார்

பருத்தித்துறை, ஞாயிறு

வடபகுதியிலுள்ள பௌத்த தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ் மாணவருக்கு தமிழில் பௌத்தம் போதிக்கும் முகமாக ஆராதனை பௌத்த-தமிழ் நிலையத்தைச் சேர்ந்த வண. கலாபொடவத்த ஞானலங்கார மகா நாயக்க தேரோ மேற்படி பாடசாலைகள் மூன்றும் பருவம் ஆரம்பிக்கும் போது ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று புத்தரின் துதிப்பாடலான 'பிரித்' பிராத்தனையைத் தமிழில் ஓதிப் போதிப்பார் எனத் தெரியவருகிறது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்ற இப்பிக்கு தமது வடபகுதிச் சேவைக் காலத்தில் பௌத்த-இந்து மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முறையில் தமிழ் நூல்களைச் சிங்களத்திலும்,சிங்கள நூல்களைத் தமிழிலும் மொழி பெயர்ப்பாரென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

...யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாயம் சம்பந்தமான இடங்களைப் பார்வையிட்டபின் கூறினார்

இவருடன் வந்துள்ள 20 பூமிசாஸ்திர ஆசிரிய. ஆசிரியைகள் வடமாகாண விவசாய விசாலிப்பு அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகரின் உதவியுடன் யாழ். குடாநாடு எப்படி அமைந்துள்ளது என்பது பற்றியும்,

# "என்னடா சண்டித்தனம் என்று 'கூறித்தாக்கினர்"

மட்டுவில், ஞாயிறு

'இரவு மணி ஏழு இருக்கலாம். நானும் தம்பி குணநாயகமும் கமத்திலிருந்து வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தோம். நாம் இருவரும் எதிரியின்வீட்டை நெருங்கிக் கொண்டிருக்கையில் முதலாம் எதிரி எம்மை வழிமறித்து 'என்னடா உனக்குச் சண்டித்தனமா' என்று கேட்டபடி என்னைத் தாக்கினார்.'

வழி மறித்து தாக்கி கத்தியால் வெட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த கணபதிப்பிள்ளை இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில் வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராமலிங்கம், கணபதிப்பிள்ளை குணநாயகம் ஆகிய சகோதரர் இருவரையும் சின்னத்தம்பி அப்பாப்பிள்ளை, அப்பாப்பிள்ளை நவரத்தினம் ஆகிய தந்தையும் மகனும் வழிமறித்துத் தாக்கி கத்தியாலும் வெட்டியதாக குற்றம்சாட்டப் பட்டிருந்தது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. வி. என். நவரத்தினம் ஆஜரானார். துணுக்காய் பகுதி காரியாதிகாரி திரு. எம். முத்துத்தம்பி வழக்கை நடத்தினார்.

மாஜிஸ்திரேட் வழக்கை இம்மாதம் 28ம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

## சிரமதானம்

வேலணை, ஞாயிறு

வேலணை மேற்குப் பிரிவில் கடற்கரை வீதியும்; கேணிக்கரை வீதியும் சிரமதான இயக்க மூலம் திருத்தி அமைக்கும் வேலை தீவுப் பகுதி காரியாதிகாரி சொ. விநாயகலிங்கம், தீவுப்பகுதி எம்.பி திரு.வ. நவரத்தினம் தலைமையில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகிறது.

கிடைக்கும் 'ஜிப்சம்' என்னும்பொருளை உபயோகித்து எப்படி உவர்மண் பண்படுத்தப்படுகிறது என்பது பற்றி விவசாய அதிகாரி விளக்கிக் கூறினார்.

மேற்படி குழுவினர் தற்போது மற்ற மாகாணங்களின் அமைப்பு முன்னேற்றம்பற்றி ஆராய்ந்து வருகின்றது.

## 'முன்மாதிரி'

அளவெட்டி, ஞாயிறு

''அளவெட்டிக்கு மின்விநியோகம்செய்யும்போது பாவனையாளர் யாவரும் மின்சார வசதிபெற கிராம வங்கி மூலம்அவர்களுக்குகடன்வழங்க நடவடிக்கை எடுத்தது நாட்டிற்கு முதலாவது சிறந்தமுறையும், மற்றக்கிராமங்களுக்கு முன்மாதிரியுமானது.''

இவ்வாறு மக்கள் வங்கி பொதுமுகாமையாளர் திரு. கன்னங்கரா அளவெட்டிபலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் கன்னங்கரா தொடர்ந்து பேசுகையில் மக்கள் வங்கி தொடர்பு கொண்டுள்ள கூட்டுறவு சங்கங்களுள் பலபுதியவழிகளில் இயங்கும் உங்கள் சங்கம் முதன்மைபெற்ற சிறந்த சங்கமாகும்.

மின்சாரவிநியோகத்திற்கு அங்கத்தவர்களின் மின் இணைப்புச் செலவுகளைச்சமாளிக்க, நீங்கள் மேற்கொண்டுள்ளநடவடிக்கை நாடுமுழுவதற்கும்முதலாவதும் முன்மாதிரியானதுமாகும்.

## ரூ. 75 அபராதம்

மல்லாகம், ஞாயிறு

இணுவிலைச்சேர்ந்தவேலன் ஐயாத்துரை, என்பவர் சட்டவிரோத கோடா வைத்திருந்ததாக சுன்னாகம் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்ட போது தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து எதிரிக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் ரூபா 75 அபராதம் விதிக்கப்பட்டது.

2 லைசென்ஸ் இன்றி சாராயம் விற்பனவு செய்த குற்றத்திற்கு எஸ். தங்கவேலு, ஐ.ஆரோக்கியநாதன் என்ற இருநபர்களுக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்த குமாரசாமி தலா 30 ரூபா அபராதம் விதித்தார்.

மும் 4 ஆயிரம் அந்தர் வெங்காயம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தது. ஆனால் இன்று வெங்காயம் கொழும்பில் விற்கத் தடை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வெங்காயம் அறுவடை செய்யப்

## கலைவிழா

சுழிபுரம், ஞாயிறு

கட்டுவன் மயிலிட்டி தெற்கு வறுத்தலைவிளான் நல்நோக்கியக்கத்தினர் கலைவிழாவொன்றை நடத்தினர். இயக்க உடற்பயிற்சி மைதானத்தில் விழா நடைபெற்றது. பிரதமவிருந்தினராக மயிலிட்டிக் கிராம சபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி கலந்துகொண்டார். திரு. த. து. ஜெகன்நாதன் வரவேற்புரை நிகழ்த்தினர். பேச்சாளர்களாக அ. விநாயகமூர்த்தி, எஸ். ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர். செல்வி சலிமாகலாவின் கிராமிய நடனம், வானொலிப் புகழ் ராஜ் நாடகமன்றத்தாரின் சக்கடத்தார், சண்முகம் குழுவினரின் நகைச்சுவை நாடகம், மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றத்தினரின் 'சட்டம்பியார்சரி' நகைச்சுவை நாடகம் ஆகியன நடைபெற்றன

## 'உண்மையான ஜனநாயகம்''

உடுப்பிட்டி, ஞாயிறு

''சமுதாயத்தில் தனி மனிதனின் பங்கு மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு மனிதனுக்கும் சம அளவுஉரிமை இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனும் அவன் இருக்கும் ஒரு குழி நிலமும்கூட அவனுக்குச் சொந்த மாக்கப்பட வேண்டும். உண்மையானஜனநாயகம் இதுவேயாகும்.''

இவ்வாறு வடமராட்சி சனசமூக நிலையங்களின் சமாஜ செயலாளர் திரு. சி. செல்லையா துன்னாலை பருத்தியோலை வளர்மதி சனசமூகநிலைய 2-வது ஆண்டு நிறைவு விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

மேற்படி சனசமூக நிலைய நிர்வாகசபைக் கூட்டத்தில் புதிய உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு பொ சுந்தரம், காரியதரிசி திரு கோ பொன்னையா, தனாதிகாரி திரு கி தளையசிங்கம் 10 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது-

எதிர்வரும் 28-ந் திகதி பொதுமக்களுக்குச் சிரமதானம் மூலம் ஒரு பொதுக் கிணறு வெட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

முன்னிட்டு சைவ நெறிக்கழகத்தின் ஆதரவில் கந்தப் புராணப் பிரசங்கங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன இரவு 7 மணி தொடக்கம் நிகழும் பிரசங்கங்கள் தொடர்ந்து 6 நாட்கள் நடைபெறும்.

பிரசங்கத்தொடரைபுதுக்குடியிருப்புமகாவித்தியாலய அதிபர் திரு.கு.வி. செல்லத்துரை ஆரம்பித்து வைத்தார்.

## திறப்பு விழா

வல்வெட்டித்துறை, ஞாயிறு

மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலை புதிய கட்டிடத் திறப்பு விழா அடுத்த மாதம் 5-ம் திகதி வடமாநில கல்வி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலத்தால் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவன்று பெற்றார் தின பரிசளிப்பு விழாவும் நடைபெறும். பரிசளிப்பு பருத்தித்துறை காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தனால் வழங்கப்படும்.

## கூட்டுப்பிராத்தனை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

செல்வச்சந்நிதி கோவிலில் நடைபெற்று வரும் திருவிழாவின் போது கட்டுடையைச் சேர்ந்த திருமதி சிவஞானம் பஞ்சாட்சரமும், சங்கானையை சேர்ந்த மகேஸ்வரி தம்பையாவாலும் கூட்டுப்பிராத்தனையும், திரு. க. தருமலிங்கம், திரு. கந்தையா, எம். நடராசா, தில்லையம்பலம் ஆகியோரால் முருகன் முன்றலில் பெரிய புராணமும் படிக்கப்பட்டு வருகிறது.

வாசிகசாலை, நூல் நிலையம், விளையாட்டுமைதானம்மதகு, கிணறுபோன்ற தேவைகளில் பொதுமக்களின் நிதி சிரமதான மூலம் செய்து முடிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ஆபத்து

சித்தன்கேணி, ஞாயிறு

வட்டுக்கோட்டைக் கிராம சபையின் எல்லைக்குள்ளிருக்கும் சங்கரத்தை என்னும் பகுதியில் கால்நடைத் திருட்டுக்கள் அடிக்கடி நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது. இதனால் இரவில் தூர இடங்களிலிருந்து சங்கரத்தை ஊடாகப் போக்குவரத்துச்செய்பவர்கள் திருடர்களெனச் சந்தேகிக்கப்பட்டுத் தாக்கப்படுகிறார்களாம். இத்திருட்டைத் தவிர்க்கத் தொண்டர் படையு நிறுவப்படவிருக்கிறது.

## இரவுப் பாடசாலை

சித்தன்கேணி, ஞாயிறு

பிலவத்தைப் பகுதியிலுள்ள மாணவர்களின் கல்வியை முன்னேற்றவேண்டுமெனக் கருதி, பிலவத்தை சனசமூக நிலையத்தார் ஓர் இரவுப் பாடசாலையை நடாத்திவருகின்றனர். இதன் இயக்குனராக நிலையச் செயலாளர் திரு. இ. கு. சிவஞானம் பணியாற்றுகிறார்.

## தீக்குளிப்பு


அல்லைப்பிட்டி, ஞாயிறு

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இம் மாதம் 25-ந் திகதிதீக் குளிப்புவைபவத்துடனும் 27ந் திகதிநடைபெறும் சுற்றுப் பிரகாரத்துடனும் தீர்த்த உற்சவத்துடனும் விழா நிறைவெய்தும்.

# புதிய ஜே. பி.

சுழிபுரம், ஞாயிறு

பொன்னாலையைச் சேர்ந்த திரு. ஏ. ஜே. எம். மயில் வாகனம் புதிய சமாதான நீதிபதியாக யாழ். மாவட்ட



நீதிபதி முன்னிலையில் நேற்றைய தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சுழிபுரம் கிராமசபையின் உபதலைவராகவும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிர்வாக சபை உறுப்பினராகவும், பொன்னாலை விளையாட்டுக்கழக இயக்குனராகவும் பணியாற்றுகின்றார்.

சமூகசேவையில் முன்னின்று உழைக்கும் இவர் ஓர் இளைப்பாறிய அரசாங்க ஊழியராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

'நான் நம்பிக்கையை எப்பொழுதும் இழக்கவில்லை. மிகவும் நெருக்கடியான காலத்திலும் நம்பிக்கை எனதுள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும். என்றும் எனது நம்பிக்கையைக் கொல்லமுடியாது'. — மகாத்மா காந்தி.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 9-ந் திகதி (25 - 8 - 69)

## நல்ல காலம் வருகுது!

'நல்லகாலம் வருகுது, நல்ல காலம் வருகுது' என்று குடுகுடுப்பைக்காரன் கூறுவதுபோல நாமும் 'நல்ல காலம் வருகுது' என்று கூறத்தொடங்கியிருக்கிறோமேயென்று இத்தலையங்கத்தின் தலைப்பைப் பார்த்ததும் சிலர் சலித்துக்கொள்ளக்கூடும். நல்லதையே எண்ணி, நல்லதையே சொல்லி, நல்லதையே செய்யவேண்டும் என்று நம்புபவர்களுக்கு இத்தலைப்பு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கலாம்.

திரு. டட்லி சேனநாயகா தலைமையில் அமைந்த 'தேசிய அரசாங்கம்' ஐந்தாவது வரவு-செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்து அதன் இரண்டாவது வாசிப்பையும் ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றியிருப்பதாலோ, அரசாங்க ஊழியர்களின் சம்பளம் அடுத்த மாதம் தொடக்கம் அதிகரிக்க இருப்பதாலோ, ஐந்தாண்டுக் காலமும் இந்த அரசாங்கம் ஆட்சியிலிருக்குமென்று பிரதமர் பெருமையுடன் கூறியதாலோ நாம், 'நல்ல காலம் வருகுது' என்று குடுகுடுப்பைச் சாத்திரம் கூறுவதாக நினைக்க வேண்டாம். வரவு-செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் வேடிக்கையான பேச்சுக்களும் உள் அம்பலங்கள் சிலவும் வெளிவந்ததும் கூட இதற்குக் காரணமல்ல.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய பலரும், நெருங்கி வரும் அடுத்த பொதுத்தேர்தலைக் கருத்தில்கொண்டு, தேர்தல் பிரசாரத்தின் அங்குரார்ப்பண வைபவமாகவே ஆட்சிமன்றத்தில் பேசினர்களென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். ஆனாலும் கூட ஒரு சிலர் மிகத்துணிச்சலோடு, சில நல்ல யோசனைகளைத் தெரிவித்தனர். இது

காண்போம்' என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவரைக் குறிப்பிட்டுப் பேசியது ஒரு நல்ல அறிகுறி.

இந்துப் பல்கலைக்கழகமா, தமிழ்ப் பல்கலைக்கழகமா? திருக்கோணமலையிலா, யாழ்ப்பாணத்திலா இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும்? இவைபோன்ற சர்ச்சை தமிழ்க்கட்சிகளுக்கிடையில் நீடித்துவந்ததனால் தமிழருக்குக்கிடைக்க வேண்டிய உரிமை எதுவும் கிடைக்கவில்லையென்றும் பல்கலைக்கழக விஷயம் பற்றி 'நாம் நமக்குள்ளேயே பேசித்தீர்த்துக்கொள்ளலாம்' என்று திரு அமிர்தலிங்கம் ஆட்சிமன்றத்தில் கூறியிருக்கிறார். பல்கலைக்கழக விவகாரம் பற்றித்தான் அவர் 'நமக்குள்ளேயே பேசித்தீர்க்கலாம்' என்று கூறியிருந்தாலும் 'பேசித்தீர்க்கலாம்' என்று தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் மற்றொரு தமிழ்ப் பிரதிநிதியை அழைத்திருப்பது அதிலும் ஆட்சிமன்றத்தினுள்ளே வைத்து அழைத்திருப்பது 'நல்லகாலம் வருகுது' என்பதற்கு அறிகுறியாகாதா?

தமிழ் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்பதில் தமிழ் மக்களுக்கிடையிலோ தமிழ்த் தலைவர்களுக்கிடையிலோ கருத்துவேற்றுமை யில்லை. எப்படியான பல்கலைக்கழகம் எங்கே நிறுவப்படவேண்டும் என்பதில்தான் கருத்து வேறுபாடு. இதே போல்தான் தமிழ் மக்களின் மொழி உரிமை, வேலை வாய்ப்பு தமிழ்ப்பகுதிகளின் அபிவிருத்தி தீண்டாமை ஒழிப்பு ஆகிய விஷயங்களிலும் தமிழ்த் தலைவர்களுக்கிடையில் ஒருமித்த கருத்து இருக்கிறது. ஆனால் இவற்றையெப்படி அடைவது என்பதில் தான் கருத்து வேறுபாடு.

தமிழ் மக்களின் சகல

### ஆட்சிமன்றத்திலே

நமது சபை நிருபர்
பெ. சுந்தரலிங்கம்

# "பல்கலைக்கழகம் பற்றி நமக்குள்ளே பேசித் தீர்ப்போம்"

நேற்று மூட்டப்பட்ட நெருப்பு இன்றும் தொடர்ந்து புகைந்து எரியுமோ என்ற நிச்சயமற்ற-ஓரளவு அச்சம் கலந்த சூழ்நிலையில் ஆட்சிமன்றம் இன்று காலை 10 மணிக்கு கூடியபோது, "காதலனொருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவிலும் கை கொடுக்கும்" திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மஞ்சள் உடை தரித்து, முத்துப்பல் தெரிய மோகனப் புன்னகை பூத்தவண்ணம் கௌரவப் பார்வையாளர்கள் கலரியில் உட்கார்ந்திருந்தார். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் இன்று விளாசித்தள்ளப்போகிறார் என்பதற்கான அறிகுறியாக.

சில எம். பி.க்கள் பேசப் போகிறார்கள் என்பதற்கான சில அறிகுறிகளை நிருபர்களாகிய நாங்கள் அனுபவபூர்வமாகத் தெரிந்து வைத்திருக்கிறோம். பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசப்போகிறார் என்றால், அவரது பாரிஸ்டர் மனைவி கட்டாயம் கௌரவப் பார்வையாளர்கள் கலரியில் இருப்பார். திருமதி பண்டாரநாயக்கா பேசப்போகிறார் என்றால் அவரது மகன் அனுராவும் சிற்சில வேளைகளில் அவருடைய மகளும் பார்வையாளர்கள் கலரியில் இருப்பார்கள். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகின்றார் என்றால் அவரது குமாரன் குமார் எங்கேயாவது உட்கார்ந்துதான் இருப்பார்.

### அமிர்தலிங்கம்

இன்றைய விவாதத்தில் முதலாவது பேச்சாளராகக் கலந்துகொண்ட வட்டுக்கோட்டை எம். பி. அமிர்தலிங்கம் "மிகவும் அனுபவம் முதிர்ந்த பழம்பெரும் அங்கத்தவரான யாழ்ப்பாணப் பிரதிநிதி (ஜி ஜி.) வரவு-செலவுத் திட்டத்தை முற்றாக மறந்துவிட்டு, அடுத்து வரும் தேர்தலை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு பேசிய பேச்சில் குறிப்பிட்ட இரண்டு விஷயங்களுக்குப் பதிலளிக்க 40 நிமிடங்களும், வரவு-செலவுத் திட்டத்தைப் பற்

களுக்குள்ளேயே ஏன் சண்டை போட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டார் தமிழரசுத் தளபதி!

### நமக்குள்ளே சண்டை ஏன்?

கோரிக்கை ஒன்றானால் இடத்தைப் பற்றி நமக்குள் ஏன் சர்ச்சை. எமக்குள்ளேயே பேசித்தீர்த்துக்கொள்வோம் என்று வேண்டுகோள் விடுத்த அமிர்தலிங்கத்திற்கு மழவராயர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோர் கல்விப் பணிகளுக்காக விட்டுச் சென்றுள்ள சொத்துக்களைப் பற்றி வவுனியா எம். பி. சபையில் சமர்ப்பித்த பட்டியல் திருப்தியளிக்கவில்லை.

"இங்கொரு கால் ஏக்கரும், அங்கேயொரு அரை ஏக்கரும் இன்னொரு இடத்தில் முக்கால் ஏக்கருமாகச் சொத்துக்களின் பட்டியலைச் சமர்ப்பித்துவிட்டால் போதாது-இனிப்பு என்று எழுதிவிட்டு நாக்கால் நக்கினால் இனிக்காததுபோலத் தான் இதுவுமென்று, பெரும்பாலான இந்தச் சொத்துக்கள் அரசாங்க உடைமையாகிவிட்ட காரணத்தைச் சுட்டிக்காட்டினார். ஆதாரமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சிலை வைத்திருக்கும் இடங்கூட, கல்வியமைச்சரின் அனுமதிபெற்றுப் பெற்ற இடம் தானாம்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் எம். பி.க்கள் உட்பட 18 எம். பி.க்கள், தமிழ்ப்பல்கலைக்கழகத்திற்கு ஆதரவாகக் கைச்சாத்திட்டுப் பிரதம அமைச்சருக்கு மகஜர் சமர்ப்பித்தும், தமிழ்க்காங்கிரஸ் எம். பி.க்கள் மூவர் எதிர்த்ததால் கிடைக்காமற் போனதாகச் சொல்லி, "1966லேயே செய்துமுடிக்கக்கூடியதைத் தடுத்தவர்கள் யார்? நாமா தடுத்தோம்? என்று 'கோட்டை' விலக்கி 'டை' புரளும்மார்பை முன்காட்டி, அமிர்தலிங்கம் கேட்டபோது, 'பராசக்தி' கணேசன் நீதிமன்றத்தில் நின்று [illegible] என்று [illegible] நினைவுறுத்தியது!

### தமிழ்மொழிச்சட்ட பிரமாணங்கள்!

சர் பொன்னம்பலம் இராமநாதன் விட்டுச்சென்றுள்ள தர்மச் சொத்து தனக்குத் திரும்பிவரவேண்டும் என்று நீதிமன்றத்தில் ஒருவர் வழக்குத் தொடர்ந்திருப்பதால், அதில் வேண்டுமானால் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் 'சதிவழக்கில் பேசியதைப்போல பேசிப் பார்க்கட்டும்' என்று சொல்லிவிட்டு, டட்லிசேனநாயகாவைக் கண்ணியவான் என்றும், அவர் கொண்டு வந்த தமிழ்மொழிச்சட்டப் பிரமாணங்களை 'ஏமாற்று வித்தைகள்' என்றும் முரண்பாடாக பேசியதற்கு பதில் கூற இறங்கினார்.

டட்லி கண்ணியவான் என்று ஏற்றுக்கொண்டால், அவர் ஏமாற்றுவித்தையில் எப்படி இறங்குவார் என்பதுதான் அமிர்தலிங்கம் ஜி. ஜி.யின் முன் வைத்த கேள்வி!

1966லே தமிழ்மொழிச் சட்டப்பிரமானங்கள் ஆட்சிமன்றத்திலே விவாதிக்கப் பட்டபோது, "இங்கேயுள்ள பிரச்னையைத் தீர்க்க முடியாது, உலகப் பிரச்னையைத் தீர்க்கப்போயிருந்த உலகத் தலைவர்" திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், அதற்கு ஆதரவாக வாக்களித்துவிட்டு, இன்று அதனை ஏமாற்றுவித்தை என்று வர்ணிப்பது வட்டுக்கோட்டையாருக்கு எட்டிக்காயாகக் கசந்தது!

"1970ல் யாழ்ப்பாண மக்கள் துரத்தியடிக்கப் போவதைப்போல, 1960ல் துரத்தியடிக்கப் பட்டிருந்தாலும், 1956ல் இருந்து இந்தச் சபையிலிருக்கும்" தமிழ்க்காங்கிரஸ் தலைவர் தமிழுரிமை பெற, தமிழரசுக்கட்சியைவிட அதிகமாக எதைச் செய்துவிட்டார்? என்பது அமிர்தலிங்கம்கேட்ட இன்னொரு கேள்வி.

1656ல் காலிமுகக் கடற்கரையில் தமிழரசுக்கட்சியினர் சத்தியாக்கிரகம் நடத்தி, குண்டாந்தடி [illegible] இரத்தம் சிந்தியவேளையில் "பொலிஸ் ஜீப்புக்குப் பக்கத்தில் ஜி. ஜி. பொன்னம்பலம் சென்று நின்றுகொண்டிருந்தார் என்று சொல்லி காங்கேசன்துறையின் "கெட்டித்தனத்திற்கு" 'சர்டிபிகேட்' வழங்கியது வட்டுக்கோட்டை."

### உபகதை

"தமிழரசுக் கட்சியினர் தமிழுரிமை கோரி போராட்டங்களை, இயக்கங்களை நடத்தியவேளைகளில் எல்லாம் படுத்துறங்கிய தமிழ்க்காங்கிரஸ் தலைவர் இப்பொழுது எழுந்துவந்து கண்ணீர் வடிப்பதை" வைத்துக்கொண்டு கட்டுக்கதை ஒன்றைச் சொன்னார் வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம்.

"ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பி இருவர் இருந்தனர். அன்னையின் ஆபரணங்களைத் திருடன் ஒருவன் திடீரென ஒருநாள் பறித்துக்கொண்டான்; பத்து வருடங்கள் போராடி தம்பி, ஒருவாறாக, சில நகைகளை மீட்டுக்கொண்டு வர, அண்ணன் வேடிக்கை பார்த்திருந்துவிட்டு, அடப்பாவி, துரோகி, முழு நகையையும் மீட்காமல் வந்துவிட்டாயே, உன்னை அன்னை மன்னிப்பாளா? என்று சபித்தானாம்!

இப்படியாக 40 நிமிடங்களுக்கு மேலாகத் தமிழ்க்காங்கிரசுக்கு பதிலளித்துவிட்டு, இறுதி ஐந்தாறு நிமிடங்களில் வரவு செலவுத்திட்டத்தைப்பற்றி பேசமுனைந்தார்.

### வரவுசெலவுத்திட்டம்

"சேற்றிலே சிக்கிய வண்டியை வெளியே இழுக்க முடியாமல் — இப்பொழுது மீட்கப்போனால் சேற்றை அள்ளிப் பூசிக்கொள்ள வேண்டுமே எனப் பயந்து, வேண்டுமானால் அடுத்த தேர்தலுக்கப்புறம் பார்த்துக்கொள்வோம் என்று சேற்றிலேயே வண்டியை விட்டு விட்டு வந்ததைப் போலத்தான், சீர்கேடாகியிருக்கும் எமது பொருளாதாரத்தை, இந்த வரவு செலவுத்திட்டம் சீர்படுத்த முயலாது, தந்திரமாக, மந்திரமாக, மாயஜாலமாக மூட்டிவைத்திருக்கிறார்கள்" என்பதுதான் அமிர்தலிங்கத்தார் வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி பேசிய பேச்சின் சாராம்சம்.

# சந்தை சிரிக்கிறது!

மெல்லிய மழைகசிந்து தூறிக்கொண்டிருக்கிறது. பிரதமர் திரு. டட்லி சேனநாயகா வருகிறார். அவர் அருகில் முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நடந்து வருகிறார். இவர்களுடன் இன்னும்பல அதிகாரிகளும் புன்சிரிப்புடன் வருகின்றார்கள். யாழ்ப்பாண நகரமக்களெல்லாம் மழையையும் பொருட்படுத்தாமல் சிரித்த முகத்தோடு ஓடியோடி இந்த ஆனந்தக்காட்சியை ஆவலோடு பார்க்கிறார்கள்.

போர்த்துக்கேயர் காலத்துக்கட்டடம்இடிபட்டுதேசிய ஆட்சிக்காலத்துப் புதிய கட்டடம் ஒன்று உயர்ந்துவளர்வது போன்று ஒரு நெஞ்சு பூரிக்கும் நினைவு மக்கள் மத்தியில் உயர்ந்து வளர்கிறது. மழையென்ன இடியையும் தாங்கக்கூடிய மனோதைரியத்துடன் அத்திபாரக்கல் நாட்டப்படும் இடத்துக்கு யாழ். நகரமக்கள் ஓடுகிறார்கள்.

அந்தக்காட்சி இரண்டு வருடங்களுக்குமேலாக இன்னமும் நெஞ்சில் இடியாது நிற்கிறது.

யாழ்ப்பாணத்தில் நவீன சந்தைக்கனவுநனவாகிவிடும் என்று எண்ணியிருந்தவர்கள் இரண்டு வருடங்களுக்குமேலாக அத்திபாரக்கல் நாட்டப்பட்ட இடத்தையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய பரிதாப நிலையிலேயே இருக்கிறார்கள்!

இந்த இரண்டுவருடங்களுக்குள் எத்தனை மாற்றங்கள் உலகில் நிகழ்ந்து விட்டன. ஆனால் இந்த அத்திபாரக்கல்மட்டும் எதிர்பார்த்த அளவுக்கு வளராததற்கு காரணம்தான் புரியவில்லை. ஒருவேளை நிலம் சரியில்லையோ! பாவம், இந்த கடைக்காரர்கள் பூனைகுட்டிகளைக் காவின மாதிரி எங்கெல்லாம் அலைந்தார்கள். யாழ்ப்பாண நகரில் கடைவைக்கவந்த தலைவிதியைத் தவிரவேறு ஏதும்பூர்வஜன்ம தொடர்புகள் இருக்குமோ என்னவோ.

யாழ்ப்பாணமக்களின்கூட்டுறவின் வளர்ச்சியின் சின்னமாக முற்றவெளியில் யாழ். மாநகரசபையைப் பார்த்தபடி அமைதியாக உயர்ந்து நிற்கும் கூட்டுறவுசம்மேளனத்தின் கட்டடத்தை ஒருமுறைபார்க்கும்போது அத்திபாரக்கல் எப்போது நாட்டப்பட்டது என்று பலர் கேட்பது காதில் விழவில்லையா!

ஒழுங்காக சந்தையில் மழைபடாமல்தமக்கு விரும்பிய பொருள்களை வாங்கலாம் என்று நம்பிக்கொண்டிருக்கும் பாவனையாளர்கள் இன்னும் தாம் அணிந்திருக்கும் உடைகளை (மினிஸ் கேர்ட் அணிந்திருப்பவர்களைத்தவிர) சிறிது உயர்த்திக்கொண்டு காலைமெதுவாக வைத்து எத்தனையோ முடக்குகளுக்குள்ளால் அந்தப்பழைய சந்தைப் பக்கமாக சென்று கொண்டிருக்கும் காட்சியைக் காண்பதே ஒரு தனி அழகுதான்!

'இதோ சந்தை இதோ சந்தை என்று எத்தனையோ அதிர்வெடிகளுடன் கிளம்பிய சந்தை முளைக்காமலே நின்று விட்டது!

தேர்தல் காலத்தில் வெளியிடப்பட்ட நோட்டீஸில் அச்சடிக்கப்பட்டிருந்த உறுதிகளில் நவீன சந்தையுமொன்று. இந்த நோட்டீஸ் அடுத்ததேர்தலுக்கும் பயன்படலாம் என்ற நம்பிக்கை இப்போது உதயமாகியிருக்கிறது. அந்தஅளவில் நல்லது தான்!

— கணேஷ்

### 3 [illegible]ளம்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

க்கமும், செல்வி பாலசிங்கமும் சாட்சியமளிக்கையில் மூன்று பெண்களின் கற்புக்கும் எவ்வித பங்கமும் ஏற்படவில்லை எனத் தெரிவித்தனர்.

இறந்தவர்களின் தாயார் தெய்வானைப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

'எனது கணவருடன்துரைசிங்கம் என்பவர் வீட்டுக்கு வந்துவிட்டு வேலி அடைக்க உதவினார். பின்னர் வீட்டுக்கு அடிக்கடி வந்து போனார், பின்னர் 2 நாள் எங்கள் வீட்டில் வந்துதங்கினார். அப்போது அவர் மூத்த பிள்ளையுடன் தொடர்பு வைக்க முயன்றிருக்கலாம்.

இவர்களுடன் கூடப் பிறந்தவர்கள் எல்லாமாக 7 சகோதரர்களாவர். மூவர் ஆண்கள் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது:

துரைசிங்கம் என்பவரை பொலிசார் தேடுகின்றனர்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் உயிர்தப்பியபெண்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

[illegible]
நேர்தல் பிரசாரத்தின் அங்குரார்ப்பண வைபவமாகவே ஆட்சிமன்றத்தில் பேசினார்களென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். ஆனாலும் கூட ஒரு சிலர் மிகத்துணிச்சலோடு சில நல்ல யோசனைகளைத் தெரிவித்தனர். இது வெறும் யோசனையாகவே இருந்துவிடு மென்பதையும், செயற்படாதபட்சத்தில் 'நாங்கள் சொல்லியும் நடைபெறவில்லையே' என்று சமாதானம் சொல்லலாமென்ற நோக்கத்தில்தான் இப்படிச் சொன்னார்கள் என்றும் சிலர் வியாக்கியானம் செய்யக்கூடும். அவர்கள் என்ன நோக்கத்தில் சொல்லியிருந்தாலும் அவை நல்ல யோசனைகளானால் அவற்றைத் தெரிவித்துள்ளவர்கள் எப்படியான கருத்தையும், கொள்கைகளையுமுடையவர்களானாலும் அவற்றை ஏற்றுப் பரிசிலனை செய்து செயற்படுத்த முனையவேண்டியது அனைவன் கடமையும் பொறுப்புமாகும்.

தமிழர்களின் பிரச்னைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வுகாண்பதற்குச் சகலகட்சித் தலைவர்களையும்கொண்ட வட்டமேசை மகாநாடு ஒன்று கூட்டப்படவேண்டும் என்று மீரிகமைப் பிரதிநிதி திரு. சிவா ஒபயசேகரா ஆட்சிமன்றத்தில் கூறிய அருமையான யோசனையைச் செயற்படுத்த முன்வரவேண்டுமென்று நாம் இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தோம் ஆட்சிபீடத்தில் உள்ள பிரதமர்தான் வட்டமேசை மகாநாட்டைக்கூட்டுவதற்குத் தகுதியும்பொறுப்புமுள்ளவர். ஆனாலும் தமிழர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகண்டு அவர்கள் இரண்டும் கெட்ட நிலையில் வாழாமல் ஏதோ ஒரு வழியைக் காண்பதற்கு எதிர்க்கட்சிப் பிரதிநிதியொருவரே யோசனை சொல்லியிருப்பதை நல்லசகுனமாகக்கருதி இந்த யோசனையைச் செயற்படுத்துவதற்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையிலாவது அரசாங்கத்தரப்பினருடனும் எதிர்க்கட்சியினருடனும் பேச்சுவார்த்தைநடத்தி முயற்சிசெய்வது பலனளிக்கலாம்

இதற்கு முன்னோடியாக தமிழ்ப் பிரதிநிதிகள் தங்களுக்குள் ஒரு பொதுத்திட்டத்தை வகுத்துக்கொள்ள முடியுமென்பதற்கு வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கம் 'எங்களுக்குள்ளேயே பேசி ஒரு முடிவு

அபிவிருத்தி [illegible] ஒழிப்பு ஆகிய விஷயங்களிலும் தமிழ்த் தலைவர்களுக்கிடையில் ஒருமித்த கருத்து இருக்கிறது. ஆனால் இவற்றையெப்படி அடைவது என் பதில் தான் மருத்து வேறுபாடு.

தமிழ் மக்களின் சகல பிரச்னைகளையும் தமிழ்த் தலைவர்கள், தமிழ்ப் பிரதிநிதிகள் கல்வி மான்கள் அறிஞர்கள் கொண்ட, ஒரு மகாநாட்டை (கட்சிப் பற்றற்ற சிலர் இதைக் கூட்டலாம்) கூட்டி ஆராய்ந்து பொதுத் திட்டமொன்றை வகுத்துக் கொண்டு, மீரிகமைப் பிரதிநிதிகூறிய யோசனையின் அடிப்படையில் வட்டமேசை மகாநாடு கூட்டும் யோசனையையும் செயல்படுத்த தூண்டிவெற்றி பெற்றால் அந்த மகாநாட்டில் நிச்சயம் பயன் கிடைக்கும் என்று எதிர் பார்க்கலாம். அப்படி அதில் பயன் கிடைக்காவிட்டால் வேறு எந்த வழியைப் பின்பற்றுவதற்கும் தமிழ்மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்காமற் போகாது.

## மகக்கள்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சாகிர்ஹுசேனுக்கு நன்றி மரியாதை தெரிவித்துக் கொண்டார் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அறநெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று டாக்டர் சாகிர் ஹுசேன் தெரிவித்திருப்பதை திரு கிரி மேற்கோள் காட்டினார்.

மதம் ராஜ்யம் ஆகியவையின் பெயரால் ஏற்படும் பூசல்களைத் தகர்த்து ஒற்றுமையாக நாம் முன்னேறியாக வேண்டும் என்றார்.

பாரதத்தின் ஜனநாயகப் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கவேண்டிய அவசியத்தை அவர் வலியுறுத்தினார். ஜனநாயக அமைப்பு காலத்துக்குக் காலம் தேவையான மாற்றங்களுக்குள்ளாகி வரவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பதவி ஏற்புக்காக திரு. கிரியும் தற்காலிக ஜனாதிபதி திரு இதயத்துல்லாவும் ஜனாதிபதி மாளிகையிலிருந்து ராஜபவனியில் பாராளுமன்றக் கட்டிடத்துக்கு வந்தனர். பாராளுமன்றக் கட்டிடத்தில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி, லோகசபா சபாநாயகர் திரு. தில்லோன் தற்காலிக ராஜயசபை சபாநாயகர் மற்றும் பிரமுகர்களும் வரவேற்றனர். தற்காலிக பிரதமர் நீதியரசர் முன்னிலையில் திரு. கிரி பதவிப் பிரமாணம் எடுத்துக்

வரவு-செலவுத் திட்டத்தை முற்றாக மறந்துவிட்டு, அடுத்து வரும் தேர்தலை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு பேசிய பேச்சில் குறிப்பிட்ட இரண்டு விஷயங்களுக்குப் பதிலளிக்க 40 நிமிடங்களும், வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேச ஏறத்தாழ எட்டு நிமிடங்களும் எடுத்துக் கொண்டார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ''மதத்துவேஷ அடிப்படையில் ஆரம்பித்த இந்து கலாச்சாரப் பல்கலைக்கழகக் கோரிக்கை படிப்படியாக மாற்றமடைந்து இப்பொழுது தமிழரசுக்கட்சியின் மூலக் கோரிக்கையான பூரணத்துவம் பெற்ற தமிழ் பல்கலைக்கழகம் என்ற நிலையை அடைந்துள்ளதை அந்த மனமாற்றத்தை வரவேற்றுப் பேசிய வட்டுக்கோட்டை எம். பி. கத்தோலிக்க வாக்காளர்கள் யாழ்ப்பாணத் தொகுதியிலே அதிகமாக இருப்பதால்தான் கிறீஸ்துவ கத்தோலிக்கர்களுக்கு எதிரான பல்கலைக்கழகக் கோரிக்கையை ஜி. ஜி. கைவிட்டுவிட்டதாகக் காரணம் கற்பித்தார்.

தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கம், இந்நாட்டுக் கல்விமான்களால் எப்படியெல்லாம் கட்டிவளர்க்கப்பட்டது; திருக்கோணமலையிலேயே காணி வாங்கி, கால்கோள்விழா நடத்தி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் அங்கமாக விவசாயக் கல்லூரியை ஆரம்பித்து, இன்றைக்கும் சில மாணவர்களுடன் அக்கல்லூரி தொடர்ந்து நடத்தப்படுவது-இவற்றையெல்லாம்சுட்டிக்காட்டிவிட்டு ''தெருவில் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி'' என்றபடி தொம்பே, கோட்டே தொகுதி எம். பி.க்கள் கண்டு மகிழத் தமிழ்ப் பிரதிநிதிகள் தங்

கொண்டார்.

31 மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டன. திரு. கிரியும் தற்காலி ஜனாதிபதி திரு. இதயத்துல்லாவும் தமது ஆசனங்களை மாற்றிக் கொண்டார்கள். அதன்பின் திரு. கிரி தம்து விசேஷ உரையை நிகழ்த்தினார். ஆங்கிலத்தில் அவர் நிகழ்த்திய உரை இந்தியில் உடன் மொழிபெயர்க்கப்பட்டது.

திரு கிரியுடன் ஜனாதிபதபதவிக்குப் போட்டியிட்டுதோல்வியுற்ற திரு. சஞ்சீவரெட்டியும்பதவியேற்புக்கு வந்திருந்தார் திருமதி இந்திராகாந்தி பின்னர் திரு கிரியை, அவரது இல்லத்தில் சந்தித்துமரியாதை தெரிவித்தார்,

புதிய ஜனாதிபதிதிரு கிரிக்கு பிரிட்டிஷ் மகாராணி எலிஸபெத்தும் வாழ்த்துச் செய்தியனுப்பியிருக்கிறார்.

தோம்? என்று 'கோட்டை' விலக்கி'டை'புரளும்மார்பை முன்காட்டி, அமிர்தலிங்கம் கேட்டபோது, 'பராசக்தி' கணேசன் நீதிமன்றத்தில் நின்று யார் செய்த குற்றம்? என்று வாதாடிய காட்சியை நினைவுறுத்தியது!

இன்னொரு கேள்வி.

1656ல் காலிமுகக் கடற்கரையில் தமிழரசுக்கட்சியினர் சத்தியாக்கிரகம் நடத்தி, குண்டாந்தடி அடிபட்டு இரத்தம் சிந்தியவேளையில் ''பொலிஸ் ஜீப்புக்குப் பக்கத்தில் ஜி. ஜி. பொன்னம்பலம்

தாரத்தை, இந்த வரவு செலவுத்திட்டம் சீர்படுத்த முயலாது, தந்திரமாக, மந்திரமாக, மாயஜாலமாக மூட்டுவைத்திருக்கிறார்கள்'' என்பதுதான் அமிர்தலிங்கத்தார் வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி பேசிய பேச்சின் சாராம்சம்.

டுறவின் வளர்ச்சியின் சின்னமாக முற்றவெளியில் யாழ். மாநகரசபையைப் பார்த்தபடி அமைதியாக உயர்ந்து நிற்கும் கூட்டுறவுசம்மேளனத்தின் கட்டடத்தை ஒரு முறைபார்க்கும்போது அத்திபாரக்கல் எப்போது நாட்டப்பட்டது என்று பலர்

# முன்றானைச் சேலை பற்றி மந்திரியும் மாஜி மந்திரியும்

**சென்ற வெள்ளிக்கிழமை நடந்த விவாத விபரம்.**

அரசாங்கத்தரப்பில் பேசுகின்ற பேச்சாளர்கள் அவ்வவ்போது, தாங்கள் தங்கள் வாதப் பிரதிவாதங்களுக்குத் தக்கபடி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் கடந்த காலத்தில் சொன்னவைகளையும் செய்தவைகளையும் பிரஸ்தாபித்துப் பேசுவது சம்பிரதாய பூர்வமாக நடைபெற்று வரும் வழக்கம்.

எதிர்க் கட்சியினரின் கடந்த கால வரலாற்றைச் சுட்டிக்காட்டி அவர்களை மானபங்கப்படுத்தி கோபத்தைத் தூண்டி விடுவதில் கை தேர்ந்தவர்கள் பலர் அரசாங்கத்தரப்பில் இருந்தாலும், திரு பிலிப் குணவர்த்தனவும், திரு ஹியூ பெர்னாண்டோவும் பேச ஆரம்பித்துவிட்டால் எதிர்க்கட்சியினருக்குத் தாங்காது: அடிக்கடி குறுக்கீடுகளும், வாதப் பிரதி வாதங்களும் உக்கிரமான தர்க்கங்களும் இடம் பெறுமல்இருக்காது

ஹியூ பெர்னாண்டோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அண்மைக்காலம் வரையில் அங்கத்தவராக இருந்தவர்; அமைச்சராக இருந்தவர்: அக்கட்சியின் உள்ரகசியங்களை ஓரளவு விபரமாகத் தெரிந்தவர்; எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் 1960—ல் கவிழ்க்கப்படுவதற்குக் காரணமாகவும் இருந்தவர்; குதிரை குப்புறத் தள்ளியதோடு குழியும் பறித்த கதையாய், கூடவே இருந்து அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு இப்பொழுது எதிர்த் தரப்பிலிருந்துகொண்டு உட்கட்சிப் பூசல்களைப்பற்றியும், கட்சித் தலைவர்களிடையே காணப்பட்ட கருத்து வேற்றுமைகளைப் பற்றிய வண்டவாளங்களை அவிழ்த்து விடுவதைக் காணச் சகிக்க முடியுமா?

இத்தியாதி காரணங்க

ளால் நான் திரு ஹியூ பெர்னாண்டோஇன்று வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பேசிய பொழுதும் எதிர்க்கட்சியிலிருந்து டாக்டர் என் எம் பெரேராவுக்கும் அவருக்கும் வெகு உக்கிரமான வாக்குவாதம் நடைபெற்று என் எம் ஹியூவை நோக்கி, 'நீர் என்ன மனிதனா, புழுவா? நீர் நாயாக இருக்கக் கூட தகுதியில்லை'' என்று கூச்சல் போடவும் ''ஷட் அப் என்ட் கெட் அவுட் யூ இடியட்'' (வாயைப் பொத்திக் கொண்டு வெளியேபோ முட்டாளே) என்று ஹியூ வசைபாடவும் வாய்ப்பேற்பட்டது.

### ஹியூ பேச்சு

நேற்று திருமதி சிவா ஒபயசேகரா ''இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்திக்கு உள்ள துணிச்சல் இங்கேயுள்ள பிரதமருக்கும் இல்லை; அமைச்சர்களுக்கும் இல்லை' என்றுசொன்னதை நினைவு படுத்திய ஹியூ பெர்னாண்டோ, பிரதமர் டட்லி சேனநாயக்காவின் அமைச்சரவை கட்டுப்பாடான கண்ணியமான அமைச்சரவையாக இயங்குவதால் யாரையும் விலக்கவேண்டிய பிரச்னையே எழவில்லைஎன்று பதிலளித்து விட்டு காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தின் பின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கைபற்றவும், பிரதமராவதற்கும் சில பேர்வழிகளால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளைத் தொட்டுக்காட்டினார்.

திரு ஹியூ: ''திருமதி பண்டாரநாயக்கா பிரதமராக வந்த பின்னர் பிரதமருக்குரிய நாற்காலியில் கூட அவர் அமரவில்லை; நான்காண்டுகளுக்கும் மேலாகஇந்த இடம் காலியாகவே கிடந்தது.

டாக்டர் என் எம்: நீர் அப்பொழுது அமைச்சராகத்தானே இருந்தீர்? ஏன் அப்போதே அதை எதிர்க்கவில்லை,

ஹியூ: நீர் அண்மைக்காலத்திலே தான் முன்றானைக்குள் அடைக்கலம் புகுந்தவர் உமக்கொன்றும் தெரியாது! (அரசாங்கத் தரப்பிலிருந்து பலத்த ஆரவாரம்)

டாக்டர் என். எம்: நீரும் முன்றானையைப் பிடித்துக் கொண்டு தொங்கியதை மறந்து விட்டுப் பேசுகிறீர்! (எதிர் கட்சியிலிருந்துபலத்த ஆரவாரம்)

ஹியூ' முன்றானையைப் பிடித்துக் கொண்டு தொங்குவதற்கும், முன்றானைக்குள் அடைக்கலம் புகுவதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது.

டாக்டர் என். எம்: நீர் இப்பொழுது நல்லவர் போல் பேசுகிறீர். உம்மைப் பற்றி (பிலிப்பைச் சுட்டிக் காட்டி) உமது சகபாடிகளே 'கள்ளன் என்றும், துரோகி என்றும் வர்ணித்தவைகளைப் படித்துப் பாரும்.'

இப்படியாக ஒருவரை மறுத்து ஒருவர் பதில்கூற சூடு பிடித்து, காரசாரமான வாக்குவாதம் நடைபெற, எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் அரசாங்கத்தரப்பிலிருந்தும் வேறுபல எம். பி. க்களும் கலந்து கொண்டு உரத்த குரலில் எதையெதையோ சொல்லசபை ஒரே அல்லோல கல்லோலப்பட்டது.

திரு. ஹியூ பெர்னாண்டோ தொடர்ந்து பேசுகையில், திருமதி பண்டாரநாயகாவின் தலைமையின்கீழ் பணிபுரியும் உறுப்பினராகவும் அவரது ஆலோசகராகவும் டாக்டர் என். எம். பெரேரா பணிபுரிகிறார் என்று சொல்லியபோது, டாக்டர் என் எம். எழுந்து, 'உமக்கு அங்கொடையிலிருந்து தான் ஆலோசகர் வரவேண்டும்' என்று பதில்சொல்லவே, ஹியூ பெர்னாண்டோ, அந்த இடத்திலிருந்து தொடர்ந்து 'டாக்டர் என். எம் லண்டனில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் மனநோயாளர் மனையொன்றில் தங்கிச் சிகிச்சை பெற்றதாக திரு. பிலிப் குணவர்த்தன சில மாதங்களுக்கு முன் தன்னிடம் சொன்னதாக' குண்டொன்றைப்போட்டார்!

இதைக் கேட்ட டாக்டர் என். எம். கோபாவேசம் மேலிட்டவராய், 'எங்க தைரியமிருந்தால் அதனைத் திருப்பி இங்கே சொல்லும்படி உமக்குப் பக்கத்திலிருக்கும் அமைச்சரைக் (பிலிப்) கேளும்' என்று கத்தினார்

### மனிதனா? புழுவா?

இருதரப்பு உறுப்பினர்களின் ஆதரவாளர்களுக்கிடையில், திரு. பிலிப்குணவர்த்தன, 'டாக்டர் என். எம். நரம்புத்தளர்ச்சிக்காகத்தான் சிகிச்சைபெற்றார்' என்று ஹியூவிடம் விளக்கம் கூற, ஹியூவின் கூற்றுபொய்யாகிவிட்டதை நிருபித்த டாக்டர்என். எம் 'நீர்என்ன மனிதனா? புழுவா? 'நீர் நாயாக இருக்கக்கூடத்தகுதியில்லாதவர்' என்று ஆத்திரம் மேலிட ஹியூவைநோக்கிச் சொல்லிவிட்டு, தனது புத்தகக்கட்டை எடுத்து வெளியேற ஆயத்தமானார்.

ஹியூ: எங்கே அங்கொடைக்குச் சிகிச்சைபெறவா போகிறீர்?

டாக்டர் என். எம். வெளியேறுவதைக் கண்ட அரசாங்கத்தரப்பு உறுப்பினர்கள், கூக்குரலிடவே, என். எம். திரும்பிப்பார்த்து 'இந்தக் குப்பையை, சபையையே அவமானப்படுத்தும் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பதைவிட வெளியேபோவது நல்லது; எதற்காக கூக்குரலிடுகிறீர்கள்?' என்று தாங்கொணாக் கோபத்துடன் கேட்டார்.

ஹியூவோ, 'ஷட் அப் என்ட் கெட் அவுட் யூ இடியட்', 'கெட் அவுட் யூ இடியட்' என்று திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டேயிருந்தார். என். எம். போய் விட்டார் என்று தெரிந்தவுடன், 'கோழையைப்போல ஓடிவிட்டார்' என்று வீரப்புப் பேசிய ஹியூ, தொடர்ந்து பேச முற்பட்டபோது, கட்டுகம்பொல எம். பி. யும் முன்னைநாள் சபாநாயகரும், மாஸ்கோவில் இலங்கையின் தூதுவருமாகஇருந்த திரு. டி

சகோதரர்களாவர். மூவர் ஆண்கள் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது:

துரைசிங்கம் என்பவரை பொலிசார் தேடுகின்றனர்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் உயிர்தப்பியபெண் ஆபத்து நிலையைக் கடந்துவிட்டதாகவும்அவர் வாய் முறைப்பாடு எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது,

## ஒரே பதில்

மிரிகம, ஞாயிறு

''தோம்பே அரசாங்க டிராக்டர் நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்''. இவ்வாறு நியாயமான விலைக்கு 'டிராக்டர் கேட்கும் பயிர்செய்கை குழுக்களுக்கு விவசாய இலாகா பதிலளிக்கிறது. தனியார் டிராக்டர்விற்பனையாளர்களிடம் அதிக பணம்கொடுத்துப் பெற வேண்டியதனாலேயே விவசாய இலாகாவிடம் கேட்டுகும் விவசாயிகளுக்கு மேற்குறிப்பிட்ட ஒரேபதில்தான் கிடைக்கிறது.

## நிலமற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஆட்டுப் பட்டி' என்ற காணிக்குள் பல தலைமுறைகளாகச் சிறுபான்மைச் சமூகக் குடும்பங்கள் குடியிருந்துவருகின்றன. நிலமற்றவர்களுக்கு அரசாங்கம் காணி சுவீகரித்துக்கொடுக்கும் திட்டத்தின்கீழ் மேற்படி ஆட்டுப்பட்டிக் காணியைச் சுவீகரித்து நிலமற்ற ஹரிஜன குடும்பங்கட்கு பகிர்ந்து கொடுக்கவேண்டும் என்றும் இதுசம்பந்தமாக அரசாங்கத்திற்கும், உடுப்பிட்டி எம். பி. க்கும் இரண்டு வருடங்கட்கு முன்னரே வேண்டுகோள் விடுத்திருந்தும் எவரும் எதுவித நடவடிக்கையும் இதுவரையும் எடுக்கவில்லையென்றும் இக்கோரிக்கைகள் நிறைவேறாத பட்சத்தில் பருத்தித்துறைக் காரியாதிகாரி கந்தோர்முன்பும், உப சபாநாயகரும் உடுப்பிட்டி எம் பி.யுமான திரு. மு. சிவசிதம்பரத்தின் வீட்டின் முன்பும் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் இதுபற்றி இறுதி வேண்டுகோள்விடுத்துஅதன் முடிவுகண்டு நடவடிக்கையில் இறங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பி சுபசிங்காவுக்கும் ஹியூவுக்கும் இடையில் மீண்டும் காரசாரமான வாக்குவாதம் நடைபெற்றது.

(நாளை முடியும்)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org